Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஜ்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 4. { 1913௵ ஜுன்௴ 15௳
பிரமாதீச௵ ஆனி௴ 2௳ } பகுதி 2.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTETNS.)

1. பகவான் கௌதமபுத்தரின் சரித்திரம் ப. நாராயண ஐயர். 39
Life of Bhagavan Gautama Buddha–P.Narayana Iyer.

2. நம்முடைய வாலிபர்கள் நற்குணஸம்பத்து அமையப் பெறும் முறை(முன்தொடர்ப்)—விசாலாக்ஷி அம்மாள்.
How our youth should develope their charecter, continued—Visalakshi Ammal

3. திருமந்திர ஆராய்ச்சி, முன்தொடர்பு—மாதவன் 51
Some researches in Tirumantra, continued–Madhavan

4. துகாராம் பாவாவின் சரித்திரம், முன்தொடர்பு—A. சிவராவ் 57
Life of Tukaram Baba, continued—A. Siva Rao.

5. பிரஹ்மஞாநதர்சநம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர் 63
Elements of Theosophy—V. Vengusamy Iyer.

6. ஸங்கராந்தி அல்லது உத்தராயணம், முன்தொடர்பு ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர் 68
Winter Solstice, continued—R.S.Narayanasamy Iyer.

7. புத்தகவரவு—பத்திராதிபர். 74
Review of Books—Editor.

8. பத்திரிகை வரவு—பத்திராதிபர். 74
Review of papers—Editor.

9. சமாசாரம்—பத்திராதிபர். 75
News—Editor.

ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதனை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச்சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத்தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இது டிம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக்கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர் செய்துகொள்ளுங்கள். சந்தா விவரம்.

12 ஸஞ்சிகைக்கு முன்பணமாக வி. பி. சார்சு உள்பட ரூ 2—12—0
சந்தாதார்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா ரூ 1—7—0

Apply to—மானேஜர், 'பக்தமாலா' ஆபீஸ்,
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Supplement to "Poorna Chandrodayam."

GAUTAMA BUDDHA.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4.	1913ஞ ஜூன்மீ 15உ பிரமாதீசஞ ஆனிமீ 2உ	பகுதி 2.

பகவான் கௌதம புத்தரின் சரித்திரம்.*

"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வன்"—மணிமேகலை.

1. இப்போதைக்கு 2,500 வருஷங்களுக்கு முன்னர் வட இந்தியாவில் கபிலவாஸ்து என்ற நாட்டில் சுத்தோதநன் என்ற ஒரு அரசன் ஆட்சிசெலுத்திவந்தான். அவன் மனைவியின் பெயர் மாயா தேவீ. இவ்வரசன் 'நீதிவழுவாது அறநெறிமுறையில் இராஜ்யத்தை ஆண்டுவருநாளில், மாயாதேவீ ஒரு ஸத்புத்ரனைப் பெற்றாள். இக்குழந்தைதான் கௌதமர் என்பவராவர். இம்மஹாபுருஷனின் அவதாரத்தின் உயர்நலத்தைக் காட்டக்கூடிய சுபசகுநங்களும் நன்னிமித்தங்களும் அனேகம் சம்பவித்தன. தேவகந்தர்வர்கள் கானம் பண்ணினார்கள். பிரஜைகளெல்லோரும் அரண்மனையில் இளவரசன் பிறந்த உத்ஸவத்தைத் தங்கள் தங்கள் வீட்டின் வாயிலின்

---

* குறிப்பு:--மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையாரால் பிரஸித்தமாகிவரும், Young Citizen என்ற பத்திரிகையின் 1913 ஜனவரிமீ ப்பகுதியினின்று இது மொழிபெயர்க்கப்பெற்றுக்கிறது. கௌதம புத்தரின் அவதாரமஹிமையையும், பௌத்த தருமத்தையும் பற்றி விரிவாய் அறியவிரும்புவோர், மஹாமஹோபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஐயரவர்களால் பிரஸித்தம் செய்யப்பெற்றிருக்கும் மணிமேகலை என்ற புத்தகத்தைப்பார்க்கவேண்டும்.

முன்பாக தோரணங்கள் கட்டியும் கோலங்கள் போட்டும் கொண்டாடினார்கள். அக்காலத்தில் அவ்வூருக்குப் புதிதாய் அந்யதேசத்தவனொருவன் வந்து பார்த்திருப்பானாகில், இன்னார் வீட்டில்தான் கல்யாணம் என்று அறியக்கூடாமல் அவ்விராஜ்யத்தில் எல்லோரையும் பரமஸந்துஷ்டர்களாகவே கண்டிருப்பான். இவ்விதம் எல்லோருடைய மநங்களிலும் ஸந்துஷ்டி ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால், அக்குழந்தையின் சரீரம் ஒரு மஹா ஞாநியின் உறைவிடமாக ஏற்பட்டு, அவர் உலகத்திற்கு ஞாநகுருவாவார் என்றும், அல்லது உலகத்தை ஓருங்கே ஆளும் சக்ரவர்த்தியாவார் என்றும், தீர்க்க தரிசிகளும் மற்ற பெரியோர்களும் ஞாநதிருஷ்டியாலறிந்து வெளியிட்டார்கள். இதைக் கேள்வியுற்ற அரசன் சுத்தோதநன் தன் புத்ரன் உலகத்தை, கம்பீரமான ராஜனாகவிருந்து ஆண்டு அநுபவித்து வாழவேண்டுமெனும் கருத்தை யுடையவனாயிருந்தான். தன் குழந்தை ஞாந முதிர்ச்சியடைதலை அவன் விரும்பினானில்லை. கௌதமர் ஏதேனும் கவலையடைந்து அதனால் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளாவண்ணம், வெளி உலக விஷயங்களினின்று அவரை விலக்கி திவ்யமான ஒரு அரண்மனையில் அவரை இருக்கும்படி செய்வித்துக் காவலாட்கள் வைத்து பந்தோபஸ்து செய்வித்திருந்தான். அவருக்கு இவ்வுலக சம்பந்தமான நாநாவிதமான வேடிக்கைகள், உத்ஸாஹத்தை உண்டுபண்ணக் கூடிய ஸகல ஸௌகர்யங்களையும் ஸமக்ரமாய் அமைப்பித்தான். கௌதமர் யௌவந தசையையடையவே, தன்னைத் தியாகம் செய்துவிட்டு எங்கே துறவியாகிவிடுவாரோ என்று பயந்து அவரை ஸம்ஸாரத்திலேயே இருத்தவேண்டுமென்று கருதி கௌதமருக்கு ஒரு ஸௌந்தரமான கன்னிகையை மணஞ்செய்வித்து, விவாஹம் என்ற விலங்கைப் போட்டான்.

2. இவ்வாறு இராஜகுமாரன் ஸகல ஸௌக்யங்களோடும், உலகத்தில் துக்கம், ஜரை, வியாதி, மரணம் என்பவை இன்னவெனத் தெரியாமலும் வளர்ந்து வந்தார். ப்ரௌடிமதசையை யடைந்தார். இதுவரை அவர் உலகத்தின் கஷ்ட நஷ்டங்களை அறிந்தாரில்லை; உலகத்தில் துக்க ஸம்பவம் உண்டென்றும், வியாதி, கிழத்தன்மை, மரணம் உண்டென்றும் கேள்வியுற்றாரில்லை; உலக வாழ்வு

ஒரு ஸந்துஷ்டியான கனவு போலிருந்தது, அழகுள்ள ஒரு காட்சியாகவே தோன்றியது. இப்படி யிருக்குநாளில் ஒரு ஸம்பவம் நேரிட்டது. அதென்னவென்றால், ஒரு நாள் இவர் ரதத்தில் ஏறிக்கொண்டு தன் அரண்மனைக்கு வெளியில் பவனி புறப்பட்டுப் போகும்போது, (காவலாட்களின் அஜாக்ரதையினாலேயோ அல்லது யாராவது தேவர்களின் தூண்டுதலினாலேயோ இது நேர்ந்தது) ஒரு பிச்சைக்காரன் கௌதமரிடம் தன் பசிப்பிணியின் கொடுமையைத் தெரிவித்தான். அந்த சாந்தரான இளவரசன் இவ்வற்புதக் காட்சியைக் கண்டு திகைத்தார். உண்ண உணவில்லாமல் இந்த ஏழை வருந்துகிறான் என ரத ஸாரதி தெரிவித்தான். உடனே இராஜகுமாரர் பசி தீரும்படியான உதவி புரிந்தார். பின்பு கொஞ்ச தூரம் ரதம் செல்லவே கோரமான குஷ்டரோகத்தால் வருந்துவோனொருவனைச் சந்தித்தார். தேகம் நடுநடுங்கினார். மனிதன் அழகான சரீரம் இவ்விதமாக கோரமாயும் ஆகவும் கூடுமோ என்று வியந்தார். பின்பு கொஞ்சதூரம் செல்லவே, ஜரையினால் தளர்ந்து தள்ளாடிக்கொண்டு போகும் ஒரு கிழவனைக் கண்ணுற்றார். பிறகு ஒரு பிரேதத்தையும் தன் வழியில் ஸந்தித்தார். இவ்விதமாய் உலகத்தின் துக்கத்தைச் சற்று அறிந்தார். வறுமை, வியாதி, ஜரை, மரணம் இவை அவர் மநத்தில் பதிந்தன. தன் உள்ளத்தில் வியஸநமாய்ச் சிந்திக்கலானார். எல்லா ஸந்தோஷங்களும் நிறைந்ததாகத் தனக்குக் காணப்படும் இவ்வுலகத்தில் துக்கம் எவ்வாறு புகுந்தது எனச் சிந்தித்துக் கொண்டு போகையில், ஆத்மாவைக் காணும் பொருட்டு உலகத்தைத் துறந்த ஒரு ஸந்யாஸி எதிர்ப்பட்டார். அவர் முகம் சாந்தமாய் இருந்தது. அவருடைய சலிக்காத கண்களினின்று சாந்தமும், தைர்யமும் பிரகாசித்தன.

3. பின்னர், இவருடைய மநத்தில் பழைய ஞாபகம் உதிக்க, உலகத்திற் சென்று உலகத்தை அழுத்தும் பளுவான பாரத்தைத் தூக்கி விடும்படியாகத் தன்னைத் தூண்டுவதுபோல எண்ணங் கொண்டார். இவ்வித எண்ண வசமாய் இருந்து கொண்டிருக்குங் காலத்தில் அவசரமாய் ஒரு அரண்மனை வேலைக்காரன் இவரிடம் ஓடிவந்து “பிரபுவே! ஸந்தோஷம் அடைவீராக! தங்களுக்கு ஒரு புத்ரன் பிறந்திருக்கிறான்” என்று சொன்னான். அவனைக் கண்டதி

ர்ந்து பார்த்தார். கண்ணீர் பெருகிக்கொண்டிருக்கும் வியஸனத்தால் மஞ்சு மூடியிருந்தது. "இன்னும் ஒரு விலங்கு எனக்கு ஏற்பட்டாற் போலும்; அதையும் வெட்ட வேண்டுவது தானே" எனத் தனக்குள் சொல்லிக்கொண்டார். இந்தக் குமாரனுக்கு விலங்கு என்று பொருள் உள்ள ராஹூலன் என்று நாமகரணம் செய்தார். இதன் அர்த்தத்தை அங்குள்ளவர்கள் அறிந்தாரில்லை. அன்றிரவு உலகவாழ்வைத் துறக்கவேண்டுமென்று நினைத்தார், அரண்மனையில் எல்லாரும் நல்ல தூக்கத்தில் அழுந்தியிருந்தார்கள். தன் ஸுந்தரமான பத்நியும் தூக்கத்தில் அழுந்தியிருந்தாள். பிறந்த குழந்தையும் அவளுடைய மிருதுவான கையில் அமர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. தன் அன்பிற் குரிய இருவரையும் குனிந்து பார்த்தார். வியஸனத்தால் மநம் பிளவுபட்டது. கண்கள் நீர் ததும்பி மங்கின. உறுதிப்பாடு பெற்ற அவருடைய உதடுகள் சலிக்காமல் ஒரே பிடியாய் இருந்தன. இவர்களைவிட்டுப் பிரியப் போகின்றோமே என்ற எண்ணம் மநத்தையும் ஹிருதயத்தையும் புண்படுத்தின; ஆனால் அவருடைய உறுதியான தீர்மானத்தை அசைக்கவில்லை, தம்முடைய மெல்லிடையாள் தூக்கத்தினின்று எழாமலிருக்கும்படி தன் சுவாஸத்தையும் மெல்லியதாய் விட்டார். மௌநமாய் தம்முடைய மனைவியையும் குமாரனையும் ஆசீர்வதித்தார். அவர்களைவிட்டுத் திரும்பி நிச்சப்தமாய் வெளியேறினர். கண்டகன் என்ற தம்முடைய பிரியமான வெள்ளைக் குதிரையின் மீதேறி. சந்தகன் என்ற தன்னுடைய பிரியமான ஸாரதியையும் அழைத்துக்கொண்டு தன் பிதாவின் அரண்மனையை விட்டு வெகு தூரம்சென்றார்.

4. பின்னர் குதிரையை விட்டிறங்கி அக்குதிரையின் முகத்தை முத்தமிட்டு விலகி, தாம் அணிந்திருந்த பீதாம்பரங்களையெறிந்துபோட்டு, உலகப்பற்றை விட்டதின் அறிகுறியாக தன் அழகான தலைமயிரைக் கூரிய வாளால் வெட்டியெறிந்து, வாளையும் வீசியெறிந்தார். பாதரக்ஷை யில்லாமலும், ஸந்யாஸியினுடைய காவிவஸ்திரத்தை யுடுத்திக்கொண்டும் தம்முடன் வந்த தன் பிரியமான ஸாரதிக்கு "போ" என்று அநுமதிகொடுத்து, அடர்ந்த காட்டில் ஏகாந்தமாய் உட்புகுந்தார். இவ்விதமாய் புத்தராக வேண்

டிய மஹாபுருஷன் பத்நியையும், புத்ரனையும், அரண்மனையையும், கிரீடத்தையும், உலகஸுகத்தையும், செல்வத்தையும் துறந்து, உலகத்தின் க்ஷேமத்தின்பெருட்டு கைங்கர்யம் செய்ய நோக்க முள்ளவராய் உயர்ந்த ஸந்யாஸம் என்ற தியாக முறையைக் கைக் கொண்டார்.

5. இடைவிடாமல் ஆறுவருஷ காலமாக உலகத்தில் துக்கோத்பத்தியின் காரணத்தை மிகவும் தீவிரமான தபஸாலும், காயக்கிலேசத்தாலும் அறிய முயற்சி செய்தார். கொடுமையான விரதத்தால் தம்முடைய சரீரத்தை அதிகமாகக் கெடுத்துக் கொண்டார். மிகு துர்பலமுள்ளவராக ஆயினர். எலும்புந் தோலுமாய்த் தம்முடைய தேகத்தை வறட்சி செய்துகொண்டார். மரணவஸ்தையிலிருப்பவர் போலத் தோன்றினர். கடைமுறையில் ஞானம் பெறுதல் இவ்வழியால் முடியாதெனத் தெரிந்துகொண்டார். காயக்கிலேசம் செய்வதை விட்டார். அந்தர்முகப்பட்டார். ஜீவவாழ்க்கையின் உண்மையை உள்நோக்கிச் சிந்திக்கலாயினர். "செல்லும் வழியில் சிந்தையைச் செலுத்தினர்." உள்நோக்கிய முறையே சரியான முறை எனத் தீர்மானம் கொண்டார், முன் அநுஷ்டித்த மார்க்கத்தை முற்றும் விட்டார். தபஸில் தம்முடன் கூடப்பழகி வந்தவர்கள் இவரை விட்டு விலகிக் கொண்டனர். இவருக்கு மநக்கிலேசமும், தைர்ய மின்மையும் உண்டாயின. பத்நியை விட்டு வந்தோமே என மநம் சலித்தது. புத்திரனைத் துறந்தோமே எனத் துயரமுற்றார். எல்லாம் மருளாகவும் இருளாகவும் பாழாகவும் வருத்தமாகவும் தோன்றியன. இப்படி இருக்கும் நிலையில், திடீரென, உலக துக்கத்தைத் துடைக்க உபாயத்தைத் தேடுவோமென்ற, திடமான தீர்மானம் அவர் மநத்தில் பளிச்சு என்று பிரகாசித்தது. பேர் போன போதி விருக்ஷமென்று சொல்லப்பெறும் ஒருபெரிய படர்ந்த அசுவத்த விருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்தார். அந்தர்முகப்பட்டார் "ஞானம் பெறும்வரை இச்சரீரம் எவ்வளவு துரும்பாய்ப் போனாலும், மரணமானாலும் இதன்கண் ஓடிக்கொண்டிருக்கும் ரக்தம் சுண்டிப் பொய்த்துப்போய் விட்டாலும், இவ்விடத்தினின்று பெயரேன், எழேன்" என நிச்சயம் கொண்டனர். 28 நாட்கள் அஹோராத்திரம் அயர்தலும் துயிலுதலும் இன்றி சமாதியில் இருந்தார். ஞாந

பூமியின் உயர்வற உயர்நலமமைந்த பூமியைக் கண்டுபிடித்தார். உயிர் வாழ்க்கையின் மிக ஆழ்ந்த ரஹஸ்யங்களை அறிந்தார். இந்த முயற்சியில் அவர் மநம் மிகவும் புண்ணாகி வருந்தியதை அவரேதான் அறிவார். கொண்ட தீர்மானத்தைப் பூர்த்தியாகச் சாதித்தார். ஸித்தார்த்தராக இருந்த காலத்தில் அவர் செய்துகொண்ட பிரதிக்ஞையை, தீர்மானத்தை, சித்தார்த்தராக நிறைவேற்றிக் கொண்டார். அப்பெரு முயற்சியினின்று எழுந்தபோது, புத்தராக ஆயினர். பூர்ணம் பெற்ற ஞாநியாகப் பிரகாசித்தனர். சாந்தம் என்ற நிர்வாண பதத்தின் மார்க்கத்தை உலகத்தார்க்கு உபதேசிக்க ஆயத்தரானர். துக்ககாரணம், துக்க நிவிர்த்தி இவைகளை ஜநங்களுக்கு வெளியிடலாயினர்.

"மநுஷ்ய விருக்ஷத்தின் பூர்ணமாக மலர்ந்த புஷ்பமே! பிரகிருத மனிதவர்க்கத்தின், முதல் முதலில் பூர்ணம் பெற்ற புண்ணியரே! கைதூக்கிக் கைகூப்பி உலகெலாம் உம்மைப் போற்றி செய்யட்டும். அவித்யையிலும் ப்ரபத்திலும் அழுந்தி உழலும் உம்முடைய ஸஹோதரர்களாகிய ஜீவகோடிகளுக்கு, அவர்களும் அந்நிலை பெறல் இயலும் என ஆறுதலையும் நன்னம்பிக்கையையும் உண்டுபண்ணிய நாதரே! கடாக்ஷித்து அருளும்"

"எண்ணிறந்த குணத்தோய் நீ, யாவர்க்குமரியோய் நீ
புண்ணிறைந்த அருளோய் நீ, புயர்பாரநிறைத்தோய் நீ
மெய்ப்பொருளையறிந்தோய் நீ! மெய்யறமிங்களித்தோய் நீ
செப்பரியதவத்தோய் நீ, சேர்வார்க்குச் சார்வு நீ

* * * *

அருளாழிபயந்தோய் நீ, அறவாழிநயந்தோய் நீ
மருளாழி துறந்தோய் நீ, மறையாழி புரிந்தோய் நீ
மாதவரின் மாதவன் நீ, வானவருள் வானவனீ
போதனருள் போதனனீ, புண்ணியருட் புண்ணியனீ
ஆதிநீ யமலனீ ய்யனுநீ யரியுநீ
சோதிநீ நாதனீ துறைவனீ இறைவனீ." *

---

* இது மஹாமஹோபாத்யாயர் பிரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஐயரவர்களின் மணிமேகலையின் புத்த சரித்திரத்தில் மேற்கோளாகக் காட்டிய பாசுரம்.

6. கௌதமர் ஞானம்பெற்ற, (போதம் பெற்றமையால் இவர் புத்தரெனப் பெறுவர்) காலம் ஈசான சகாப்தம் 103-ம் வருஷத்தில் வைகாசிமீ விசாக நக்ஷத்திரமும், பௌர்ணமாவாஸ்யையும் கூடிய புதன்கிழமை என்பர். † பகவான் புத்தர் இவ்விதம் ஞானம்பெற்று பரிபூர்ணரான பிறகு, காசிக்ஷேத்திரத்திற்குச் சென்றார். மிருகதாவ மென்ற விடத்தில் தங்கினார். தாம் கண்டுபிடித்த மார்க்க முறையை முதல் முதலில் இவ்விடத்தில் உபந்யாஸ மூலமாய் ஜனங்களுக்கு உபதேசம் செய்தார். ஏராளமான ஜனங்கள் கூடினார்கள். பிதா தன் குழந்தைகளினுடன் பேசுவதுபோல அவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் இனிமையாகப் பேசினார். அச்சமயத்தில் ஒரு இளமான் வந்து அவருடைய கையை மிருதுவாய் நக்கினது. அவர் புன்னகை கொண்டார். வரம்பு கடந்து அருளமைந்த அப்புன்னகை அங்கிருந்தவர்களின் மனங்களைக் கவர்ந்தது அவைகளை உருகும்படி செய்தது. அவர் 40 வருஷகாலம் வடஇந்தியாவில் நாடுநகர் எங்கும் சுற்றினார். ஜனங்களைத் திரட்டி பல நகர்களில் ஞான உபதேசமுள்ள உபந்யாஸங்கள் செய்து வந்தார்.

7. அவர் பத்நியும் புத்ரனும் அவர் பாதத்தை அடைந்து ஞான உபதேசம் பெற்றார்கள். அவர் பிதாவும் அவரை அடைந்து அவருடைய சிஷ்யர்களி லொருவரானார்; உலக ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இருப்பதைவிட, ஞான ராஜ்யத்தின் அதிபதியாக இருத்தல் உயர்வென உணர்ந்தார். இக்காலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கிறவர்களில், நமக்குத் தெரிந்தவர்களில் சிலர், அவர் முன் உலகில் நடைபெற்ற காலத்தில் பிறந்திருந்தார்கள். அவரைப் பணிந்து, அவரைக் குருவாக அங்கீகரித்து, அவருடைய ஸுஹிருதமான பிக்ஷுக்களாக இருந்தார்கள். அவர்களில் இருவர் தாங்களும் அவர் நடந்த பாதையில் பிரவேசிக்கவும் அவர் போலத் தாங்களும் புத்தரின் உத்தரவாதமான பதவியைப் பெறவும் தீர்மானித்ததாக கௌதமபுத்தரின் முன்பாக பிரதிக்ஞை

† பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் ஸ்வாமிநாதையரவர்களின் புத்த சரித்திரத்தில் சொல்லியிருக்கிறது.

செய்து வாக்குறுதி சொன்னார்கள். அப்பிரதிக்ஞையை மாற்ற முடியாது. அது நிறைவேறியே தீரும். அப்பிரதிக்ஞையை பகவான் புத்தர் அக்காலத்தில் அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

8. நாற்பது வருஷகாலம் பூமியில் ஞானாசாரியராக வஸித்து, பின்பு பூமியை விட்டுப்போயினர், தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் குருவான உயர்நலமமைந்த ஸ்தானத்தை அவருடைய அன்பிற்குரிய ஞானசகோதரராகிய பகவான் மைத்திரேயரிடம் ஒப்புவித்தார்.

அவர்போன பிறகு, காசியில் மிருகதாவ என்ற இடத்தில், அவர் செய்த முதல் உபந்யாஸ ஸ்தானத்தைக் குறிப்பிடுமாறு, ஒரு பெரிய குத்தளம் மண்ணால் அமைக்கப்பெற்றிருக்கிறது. அந்தை இன்னும் பார்க்கலாம்.

9. அம்மஹாபுருஷர் பூமியை விட்டுப்போயினும், அதன் ஸம்பந்தத்தை முற்றும் துறந்தாரில்லை. இப்போதும் ஒவ்வொரு வைசாக பௌர்ணமையன்று அவருடைய ஜ்யோதிர்மயமான சாயையால்,பக்தர்களுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டு வருகின்றார். கத்தி போன்ற அவர் காட்டிய குறுகிய மார்க்கத்தில் நடைபெறுகின்ற உண்மையான பக்தர்கள் எல்லாரும் அக்காட்சியைக் கண்கூடாக இன்னும் தர்சநம் செய்து, அவருடைய அநுக்கிரகம் பெற்றுவருகிறார்கள்.

10. இஃது எப்படியாயினும், அவர் நித்தியராக இருக்கின்றார். அந்த ஸ்தானத்தைக் கடைமுறையில் எல்லா மனிதர்களும் பெறுவார்கள். அவ்விதமே அவர் கம்பீரமாக உபதேசித்துள்ளார். எல்லா ஜீவர்களும் சாந்திபெறுவார்களாக.

ஓம் தத் ஸத்.

ப. நாராயண ஐயர்.

நம்முடைய வாலிபர்கள் நற்குணஸம்பத்து அமையப்பெறும் முறை.

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

8. அதனால்தான் பக்தி என்ற ஸம்பத்தின் பெருமையை முதலில் எடுத்துக்காட்டினேன். பக்தி என்ற ஸம்பத்து உண்டாகி வளர்ச்சி யடையவேண்டுமானால், இளமைப் பருவத்திலேயே நம்மை அடுத்து இருக்கின்ற பேரியோர்களிடத்து, முதன்மையில் பக்தி பாராட்டவேண்டும். வயதுஆக வயதுஆக அது விருத்தியடையும். பின்பு புருஷர்களின் மேலுண்டாகும் பக்தியானது அகன்றிட புருஷர்களை விட்டு தத்துவங்களில் செல்லும். பின்பு ஸர்வபாவாபத்தி என்ற உயர்நலமமைந்த மெய்யுணர்வு ஏற்படும்.

(2) ஒருவன் சக்திகளை உயிர்ப்பித்தல்.

(3) ஒருவன் சக்தியை நேர்மைப்படும்படி பழக்குதல்.

9: இவை இரண்டும் ஒருவனுடைய அபிவிருத்தி முறையில் ஒன்றோடொன்று நெருங்கின சம்பந்தமுடைய அப்பியாஸங்களாம். ஆயினும், இரண்டாவதைப்பற்றி இப்போது பிரஸ்தாபிப்போம். சக்தியை நேர்மைப்படுத்தவே புதிய சக்திகள் (திறமைகள்) கொஞ்சங் கொஞ்சமாய் ஏற்படும். வாலிபர்களைப் பழக்கும் முறையில் முதன்மையானது என்னவென்றால், பிறருக்கு நலம்படும்படியாய் யாதேனும் ஒரு கைங்கர்யம் செய்தலில் பழக்குவித்தலும், அவ்விதம் கைங்கர்யம் செய்தலை அவன் பிரியமாகவும் சந்தோஷமாகவும் நினைக்கும்படி செய்தலும் முக்கியமான முறையாம். அவன் விளையாட வேண்டுமானால், பிறருடன் சேர்ந்து விளையாடுக, அவன் தொழில் செய்யவேண்டுமானால், பிறருடன் சேர்ந்து செய்க; பிறருக்குத் தன்னால் செய்யக்கூடிய நலங்களை அவன் நன்கு அறியட்டும்; அப்படி அறிவானாகில் தன்னிடமுள்ள நலங்களைப் பிறருக்கு எவ்விதமும் உபயோகமாகும்படி செய்துகொள்ளுவான். இன்னும் அதிக நலங்கள் தன்னிடம் அமையும்படி முயலுவான். பிறருக்கு நலம் செய்ய, நலம் செய்ய அவன் சந்தோஷமும் மேன்மேலும் விருத்தியாகும். பிறருக்குக் கொடுத்தலில் சந்தோஷம் உண்டாக வேண்டுமானால், முதன்மையில் பெரியோரிடம் பக்தி இருக்க வேண்டும். அவ்வித பக்திதான் சிறு கைங்கர்யங்களைச் செய்ய வாலிபர்களை உற்சாகப்படுத்தும். முதன்மையில் குறிப்பிட்ட சில பெரியோர்களிடம் பக்திபாராட்டவும் அதன்மேல் அவர்களுக்குப் பிரியமான கைங்கர்யங்கள் செய்யவும் ஏற்படும். பின்பு கைங்கர்

யம் செய்தலே பிரியகரமாயிருக்கும். "அவர், இவர்" என்று வாலிபன் வேற்றுமை யுணர்வு இல்லாமல் யாவருக்கும் நலம் செய்யக் கருதுவான். இவ்விதமாக ஒரு முக்கியமான சீலம் வாலிபனிடம் அமையும். பின்பு சரியான வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாலிபன் படிக்க ஆரம்பிக்கிறபோது குடும்பத்தைவிட விரிந்த உலகத்தில் பிரவேசித்ததாக அவன் உணர்வான். முன் உண்டான சீலம் விருத்தியாவதற்கு இப்போது அநேக சமயங்கள் ஏற்படும். பல சிறு கைங்கர்யங்கள் புரிவதற்கு அவகாசங்கள் ஏற்படும். வாலிபன் அன்புடையவனுதலினுல் அவைகளைப் பிரியத்துடன் செய்து தன் சந்தோஷத்தைப் பெருக்கிக் கொள்ளுவான். இதைப் பார்க்கும்போது இக்காலத்தில் கற்பிக்கும் முறை பிசகானதென்று நாம் அறிகிருேம். "மற்றவர்களெல்லாரையும்விட நீ முந்தவேண்டும்; அதனுல் வெகுமதிகள் பெறவேண்டும்; அவன் உயர்வு, நீ தாழ்வு; அவனை மேற்போகவேண்டும்" இவ்விதமாய் இளமைப் பருவத்தில் குழந்தைகளின் மநத்தில் வேற்றுமைப் படுத்தும் துர்ப்புத்தியை நாம் கற்பித்து வருகிருேம். இதனுல் போட்டியும், பொருமையும், அஹங்காரமும் உலகத்தில் விருத்தியாவதற்கு பள்ளிக்கூடத்தில் வித்திடுகின்றேம்.

10. பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் இவ்வித துர்ப்புத்தியைக் கற்பிக்காமல் பிறருக்குக் கைங்கர்யம் செய்வதில் எவ்வளவுக் கெவ்வளவு தன் சக்திகள் உபயோகப் படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு வாலிபன் தான் நலம் பெற்றதாக எண்ணும்படி அவனை நல்வழியில் பழக்கவேண்டும். தன் சக்திகள் எவ்வளவு குறைவாக விருப்பினும், தன் வயது எவ்வளவு இளமையாக இருப்பினும் தன்னுடைய நிலைமை எத்தன்மையதாக விருப்பினும், பிறருக்கு யாதேனு மொரு கைங்கர்யத்தைத் தான் செய்தல் கூடுமென அவன் உணரும்படி பழக்கவேண்டும், அதனுல் தன் சக்திகளின் மேல் நம்பிக்கை ஜநிக்கும். தன்னை நம்புவான். இப்படிச் செய்து வர, தான் யாரேனு மொருவர்க்கு உபகாரஞ் செய்யலாமென அவன் உறுதி பெறுவான். தன்னிடமிருக்கின்ற சக்திகள் இவ்விதம் விருத்திபெறும். அந்தோ! போட்டியும் போராட்டமும் சுயநலம் கருதலுமான பாவங்கள் பள்ளிக்கூடங்களில் இக்காலத்தில் மலிந்து கிடக்கின்றனவே! இயற்கையான நல்ல சுபாவங்களும் சீலங்களும் இத்தன்மையான இடங்களில் எப்படி மலரும்? இருக்கிறவைகள் கூடய்

பொய்த்துப் போகுமன்றோ? ஆனால் நாம் சொல்லு முறை இலகுவாய் உடனே அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரக் கூடியதன்று: இப்போது நடைபெறுகின்ற ஏற்பாடுகளை முற்றும் தவிர்க்கவேண்டும். பழைய குருட்டுத்தனமான மாதிரியை முற்றும் விடவேண்டும். உண்மையான உயிர்வாழ்வின் உயர்நலத்தை விருத்தி பண்ணக் கூடிய நாம் பிரஸ்தாபித்திருக்கின்ற முறையைக் கூசாமல் நாட்ட வேண்டும். பெற்றோர்கள் இம்முறையைத் தமது குடும்பத்தில் அநுஷ்டித்து வருவார்களாகில் அதின் மூலமாய் பிள்ளைகள் கைங்கர்யம் செய்வதில் பிரியத்தையும் சந்தோஷத்தையும் உடையவர்களாய் ஆவார்களாகில் இத்தன்மையான வித்துக்கள் இட்ட பிள்ளைகளை இம்முறையிலேயே கற்பித்து இவ்வித்துக்கள் மலரும்படியாகச் செய்விக்கும் தகைமையுள்ள ஆசிரியர்களை ஏற்படுத்திக் கொள்ளுதல் கஷ்டமன்றும். இம்முறையில் நல்ல அஸ்திவாரம் பலமாய்க் குழந்தைகளுக்கு குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில், பின்பு மேற் கட்டிடம் கட்டுவதற்கு உற்சாகமுள்ள ஆசிரியர்களே முன் வருவார்கள். ஆத்தும தத்துவத்தை நன்றாயறிந்துள்ள ஆசிரியர்கள் பிரகிருதத்தில் நடைபெறும் முறையைக் கொஞ்சமேனும் அங்கீகரியார். பிரகிருத முறை முற்றும் வெறுப்பாகவே அவர்களுக்குத் தோன்றும். முன் நாம் பிரஸ்தாபித்துள்ள உயர்நலமுள்ள முறையை அவர்கள் ஏகதேசத்தில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயலுவார்களானால் அவர்களைப் பிறர் நிந்திப்பார்கள். அவர்களிடம் அவ நம்பிக்கை கொள்ளுவார்கள். பிரகிருதத்தில் நடைபெறும் முறையே நலமென்று அதைப் பூஜிக்கின்ற மூடர்கள் இத்தன்மையான ஆசிரியர்களைத் தள்ளிவிடுவார்கள். அந்தோ! என்ன கொடுமை, என்ன கொடுமை!

11. சக்திகளை உயிர்ப்பித்தலானது ஒருமை யுணர்வு என்ற பாவத்தை வாலிபனின் மநத்தில் பதியவைத்தலின் மூலமாய்த் தான் இயலும். ஒருமை யுணர்வெனும் பாவமானது பிறருக்குக் கைங்கர்யம் செய்தல் என்னும் வழியாக வெளித்தோன்றும். இத்தன்மையான பாவம் உண்டாதலுக்கு முதலில் குடும்பத்தில் வித்திடல் வேண்டும். பின்பு அது பள்ளிக்கூடத்தில் விருத்தியடையும், மலரும். ஜலத்தில் போடப்பட்ட கல் முதலில் ஒரு சிறு வட்டத்தை உண்டு பண்ணும். பின்பு அதுவே மேன்மேலும் ஒன்றின்பின் ஒன்றாய் விரிந்துகொண்டே போகும் வட்டங்களை உண்டுபண்ணு மாறு

போல, வாலிபன் உலகத்தில் பிரவேசித்து அதின் சம்பந்தம் அதிகப்பட அதிகப்பட அவன் கைங்கர்யமும் மேன்மேலும் அதிகப்படும். அதன்மூலமாய் சகோதர பாவம் அவன் மனத்தில் உறுதிப்படும்.

12. முன் பிரஸ்தாபித்திருக்கின்ற இரண்டு முறைகளின் அநுஷ்டானத்தினால் சக்தியை நேர்மைப்படுத்தலாகிய பழக்கம் தானாக ஏற்படும். பெரியாரிடம் வைக்கும் பக்தி பெரியாரைப் போல தானும் ஆகவேண்டுமென்ற விருப்பத்தை ஒரு வாலிபனிடத்திலுண்டாக்கும். பிறருக்குக் கைங்கர்யம் செய்யச்செய்ய அதிக கைங்கர்யம் செய்யவேண்டு மென்ற ஆவல் ஜனித்து அதற்கேற்ற சக்தியும் வேண்டுமென விரும்புவான். அதுவே அச்சக்தியைப் பெறுதலுக்கு ஒரு தூண்டுகோலாகும். இது "நான் முந்த வேண்டும்" என்ற போட்டியாளின் எண்ணத்தின் காரியமன்று. போட்டியில், எல்லாம் தனக்கு என்ற எண்ணம் முன்னிற்கும். நாம் பிரஸ்தாபிக்கும் பழக்கத்தில் பிறருக்குக் கொடுத்தலே நம் கடமை என உணர்ந்து நாம் உற்சாகம் பெறுவோம். சக்தியை நேர்மைப்படுத்திப் பழக்குதல் என்றால், சரீரம், மனம், ஆத்மா இம்மூவகையாலும் அப்பழக்கம் ஏற்பட வேண்டும். உலகத்திற்கு மேன்மேலும் கைங்கர்யத்தை நன்றாய்ப் புரிதலுக்கு சரீரப் பயிற்சியும் வேண்டும்; மனப்பயிற்சியும் வேண்டும். ஆத்மாவின் சக்திகளும் விகஸிக்கவேண்டும். வாலிபனுடைய சக்திகள் நேர்மைப் படுத்தப்பட்டு சரியாய் மலரவேண்டுமானால் பெற்றோர்கள் குடும்பத்தில் வாலிபனுடைய சீலத்தில் மேற்கண்ட விஷயங்கள் அமையும்படியாக முதன்மையில் பிரயத்தனம் செய்யவேண்டும். பின்பு பள்ளிக்கூடத்தில் நல்ல ஆசிரியன் குடும்பத்தில் அமைந்த நற்குணத்தை அபிவிருத்தி செய்ய முயலவேண்டும். இவ்விருவருடைய உதவியால் வாலிபனுடைய பக்தியும், பின்பு கைங்கர்யம் செய்தலும் கைங்கர்யத்தைச் செய்யச் சக்தியும் மேன்மேலும் விருத்தியடைந்து தேசத்திற்கு நலம்பட வாழும் ஸத்புத்திரனாக அவன் அமைவான்.*

ஓம் தத் ஸத்.

விசாலாக்ஷி அம்மாள்.

---

* ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல் என்பார் அலஹாபாத்தில் நடைபெறும் லீடர் (Leader) என்னும் பத்திரிகையில் எழுதியிருந்த இவ்விஷயம் இவ்விடத்தில் சுருக்கி மொழிபெயர்த்து பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது.

55

திருமந்திர ஆராய்ச்சி.

(18-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகமத்திற்கு அர்த்தம் முக்கியமேயன்றி ஸ்வரம் முக்கியமன்று, ஆகனல் ஸ்திரீ சூத்ரர்கள் முதலானவர்கள் உட்பட்ட யாவரும் படிக்கலாம். நன்மையே தவிரத் தீமை உண்டாகாது. அர்த்தத்தைச் சரியானபடி கிரகித்துக் கிரகித்தபடி அநுஷ்டானம் ஏற்பட்டால் நலமுண்டாகும்.

9. வேத உபநிஷத்துக்கள் முறையில் வந்திருக்கிற வேதாந்தம் என்றும், ஆகமமுறையில் வந்திருக்கின்ற சைவசித்தாந்தம் என்றும் இருவித ஞானமார்க்கங்கள் நம்தேசத்தில் ஆலயங்களில் கட்டிடங்களாகவும், கட்டிடங்களின் கண்ணுள்ள மூர்த்திகளாகவும் பிரதிஷ்டைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றினுள் சிதம்பரம் நீங்கலாக தென்னிந்தியாவிலுள்ள மற்றெல்லாவாலயங்களும் பெரும்பாலும் ஆகம சாஸ்திரங்களைத் தழுவியும், சிதம்பர ஆலயம் மாத்திரம் தச உபநிஷத்துக்களையும், பதஞ்சலியார் யோக முறையையும் தழுவியும் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. சிதம்பரம் கோவிலில் வைதிக தீக்ஷிதர்களால் பூஜை நடைபெறுகிறது. இவர்கள் வேதவிதிப்படி யாகம், யக்ஞம் செய்து தீக்ஷை பெற்ற குருக்கள். யாகம் என்பது யோகத்தின் பிரதீகமேயாம்.

10. முக்கியமாக ஐந்துவிதமான யாகங்கள் உள்ளன:—

பசுமேதம்:—அதன் தத்துவம் கீழான அந்யாநாதி விஷய நுகர்ச்சியைக் கொல்லுதல் தவிர்த்தல்.

கோமேதம்:—ஆசையைக் கொல்லுதல் காமக்குரோத முதலான ஆறு அகப் பகைவர்களைக் கொல்லுதல்.

ராஜஸூயம்:—அசுத்த மநத்தைச் சுத்தமாக்கி மநத்தை ராஜாவாக ஏற்படுத்தல்.

அசுவமேதம்:—மேல்மநமான விக்ஞானத்தை வசப்படுத்தல்.

நரமேதம்:—நான் என்ற அஹம்பாவத்தை அழித்தல்.

இதனால் யோகத்தின் பிரதீகமான யாகத்தின் உண்மைகளை அறிந்து மநச் சாந்தம் பெற்ற குருக்கள் இவர்களாவார்கள். இவர்

களை அநாஹத சக்ரமான சிதம்பரத்தில் பூஜை செய்ய அர்ஹர்கள் ஆவார்கள். இம்மார்க்கம் ராஜயோக மார்க்கம் என்றும், குஹாமார்க்கம் என்றும் பெயர்பெறும், ராஜா என்றால் மநம். இது அடங்கும் முறைகளை அநுசரிக்கும் மார்க்கம்; குகை மார்க்கம், குகை என்றால் ஹிருதயகுகை, அதாவது புத்தி அதன் மூலம் பதஞ்சலியார் உபதேசப்படி கைவல்யத்தை அடையும் மார்க்கமாம். மற்றதான ஆகம மார்க்கத்தின் வழிமுறையில் உள்ள கோவில்களுக்கு சிவதீக்ஷை பெற்றவர்கள் பூஜைசெய்ய அர்ஹராவார்கள். இச்சிவ தீக்ஷாக்கிரியைகளும் உண்மையில் யோகமார்க்கத்தின் பிரதிகங்களே. ஆனால் ஒரு வித்தியாசம் உண்டு. முன்னதில் சித்த விர்த்தி நிரோத மநத்தைப் பெறல் முக்கியமாகும். அதில் மூலாதார முதற் கொண்டு ஆக்ஞை வரையுள்ள சக்கரங்கள் அவைகளின் மூர்த்திகளின் உபாஸனைகள் நிகழும். மூலாதாரத்தின் கண்ணுள்ள குண்டலினீ அக்நியை எழுப்பி அதை ஸ்வாதீநப் படுத்திக்கொண்டு, அதை பிரஹ்ம ரந்திரத்தின் கண்ணுள்ள சிவத்துடன் சம்பந்தித்து, அந்த உயர்தர ஞாநமிதுநம் ஏற்பட, அதனின்று ஏற்படும் ஞாநபோதத்தில் ஸமாதிகொள்ளுந் திறமை ஏற்படும். இது கஷ்டமான மார்க்கம். இம்மார்க்கத்திற்குக் கைலாஸ மார்க்கமென்றும், இம்மார்க்கத்தில் நடைபெறுகிறவர்கள் கைலாசபரம்பரையைச் சார்ந்தவர்களென்றும் பெயர் பெறுவர். இக்கருத்தைக் கொண்டே தென்னாட்டில் உள்ள சில மடங்கள் கைலாஸபரம்பரையைச் சார்ந்தவையெனச் சொல்லப்படுகின்றன. ஸாக்ஷாத் கைலாசத்தினின்று வந்தவர்களென அர்த்தங் கொள்ளல் சரியன்று.

11. இதனால் இந்நூலாசிரியர் அகஸ்தியரைத் தரிசநம் செய்யத் தெற்கு நோக்கி வந்தார் என்றும், பின்பு வெகு காலம் தென்னாட்டில் தங்கியிருந்து தாம் வந்த காரியம் முடிந்த பின்னர் கைலாசம் நோக்கித் திரும்பினர் என்றும் சொல்லுகிறதுண்டு. அகஸ்தியர் என்றால் அங்குஷ்ட மாத்திரமான ஹிருதய குகையில் இருக்கின்ற புருஷன், இறைவனே. இவர் தர்சநம் பெற்று ஸஹஸ்ர கமலத்திலுள்ள சிவத்தை நாடிச் சென்றார் என்பதுபொருள். இந்நூலாசிரியர் முக்கியமாக கைலாஸ பரம்பரையைச் சேர்ந்தவர், சிவ ஆராதனையில் சிறந்தவர். ஆனால் அநாஹத சக்ரத்தின் கண்ணுள்ள

மூர்த்தியின் உபாஸனையும் முக்யமென்று கொண்டாடினவர். அஃதாவது கைலாஸ மார்க்கம், குஹா மார்க்கம் இரண்டையும் இவர் ஸமரஸப்படுத்தி இவ்விரண்டு மார்க்கங்களும் ஒரே முடிவை உடையன என்பதை ஸித்தாந்தப் படுத்தினர். இரண்டின் முடிவு ஒன்றயினும் அதை யடையுமுறை யிருவகைப்படும். ஒன்று ஸித்தாந்தம். முதற்கண் நம்முடைய ஆராய்ச்சியும், அப்யாஸமும் பஹிர்முகமாக நடைபெறும்; பாஹ்ய பிரபஞ்சத்தின் விகாஸப்படிகளின் கண்ணுள்ள ஜீவராசிகளை ஆராய்ச்சி செய்து வருகையில் ஒவ்வொரு கார்யத்தையும் காரணத்தில் லயப்படுத்திக்கொண்டுவருவோம். இதைத் தான் அத்துவாக்களைத் தாண்டுதல் என்பர். இம்முறையில் முதற்காரணமான வஸ்து புருஷன் என்று ஏற்படும். அப்புருஷனை உலகத்திலுள்ள ஜீவராசிகளில் தங்கியிருக்கிறுரென்ற உண்மை உணர்வு உண்டாகும். "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்" பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்தலே பரமபதம் பெறுதலாம்.

> "𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾 𑌅𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃।
> 𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌪𑌰𑌃॥"
> 𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃।
> 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌸𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃॥

"இந்திரியங்களின் அதிஷ்டாந தேவதையைப் பார்க்கிலும் உவைகளின் அர்த்தங்களின் (விஷயங்களின்) அதிஷ்டாநகதேவதை ஸூக்ஷ்மமானது, உயர்ந்தது. அர்த்தங்களின் அதிஷ்டாந தேவதையைக்காட்டிலும் மநவின் அதிஷ்டாந தேவதை உயர்ந்தது, ஸூக்ஷ்மமானது. இதைக்காட்டிலும் உயர்ந்தது புத்தியின் அதிஷ்டாந தேவதை. இதைக்காட்டிலும் உயர்ந்தது மஹானுயிருக்கிற ஆத்மா (மஹத்தத்துவம், ஈசுவர தத்துவம், ஸூத்ராத்மா.)

" மஹத்தத்துவத்தைக் காட்டிலும் உயர்ந்தது அவ்யக்த தத்துவம் (மாயை பிரகிருதி); இதைக்காட்டிலும் உயர்ந்தது பரம புருஷன் (பரமாத்மா); இதைக்காட்டிலும் உயர்ந்தது ஒன்றுமில்லை; இதுதான் (அடையவேண்டிய) எல்லை. இதுதான் பரமானகதி (மோக்ஷம்)." கடோபநிஷத்

மற்றது வேதாந்த முறை. முகற்கண் அந்தர்முகமான அப்பாஸ முறை. ஸ்தூல சரீரம், இந்திரியங்கள், மநம் இவைகளுக்கு வேருய் அறிவுக்கு அறிவாய் தன் ஹிருதய குஹையில் ஒடுங்கியிருக்கும் புருஷனை உணர்தல். இதுவே ஈசுவரன், பரமாத்மா என்று பின்னர் அறிதல். இதை கடோபநிஷத்தில் அடியில்வருமாறு சொல்லியிருக்கிறது.

"𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑍋 𑌮𑌨𑌸𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌧𑌿 𑌮𑌹𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑍋𑌽𑌲𑌿𑌙𑍍𑌗 𑌏𑌵 𑌚।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌜𑌨𑍍𑌤𑍁𑌰𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥"

"இந்திரியங்களைக் காட்டிலும் மநஸ் பெரிது; அவற்றைக் காட்டிலும் புத்தி பெரிது; அதைக்காட்டிலும் மஹத்தத்துவம் பெரிது; அதைக் காட்டிலும் அவ்யக்த தத்துவம் (பிரகிருதி) பெரிது; அதைக் காட்டிலும் வியாபகனும் லிங்க ரஹிதனுமிருக்கின்ற புருஷன் (பிரஹ்மம்) பெரிது; எதை அறிந்து ஜீவன் (ஸம்ஸாரபந்தத்திலிருந்து) விடுபடுகிருனே, அமிருதத்தவத்தையும் அடைகிருனே (அது பிரஹ்மம்.)"

இவ்விரண்டு முறைகளையும் அடியில்வரும் பாசுரத்தில் திருமூலர் உபதேசிக்கிறார்.

"தானன வேதாந்தந் தான் என்னுஞ் சித்தாந்தம்
ஆனத் துரியத் தணுவன்; றனைக் கண்டு
தேனர் பராபரஞ் சேர்சிவ யோகமா
யான மலமற் றருஞ்சித்தி யாதலே."*

இவ்விரண்டு மார்க்கங்களிலும் பயின்று உண்மையை உணர்கிறவனே "தத்வமஸி" என்ற மஹாவாக்கியத்தின் உண்மையை உணர்ந்தவனாவன். முதல் மார்க்கத்தில் அதாவது சைவ சித்தாந்தத்தில் பஹிஷ்பிரபஞ்சத்திலுள்ள புருஷனை அறிதல். பின்னதில் அதாவது வேதாந்தத்தில் அந்தர்ப்பிரபஞ்சத்திலுள்ள புருஷனையறிதல். பின்பு இரண்டையும் ஒருமைப்படுத்தல் ஏற்படும். பஹிஷ்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள புருஷனும் அந்தர்ப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள புருஷனும் ஒருவனே என்று உணர்வான். இந்த உயர்நலமுள்ள ஞாநஉதயத்தை அடியில் வரும் திருமந்திரம் அறிவுறுத்துகிறது.

---

*குறிப்பு:—"தானன வேதாந்தம்"=ஜீவாத்மாவே பிரஹ்மம். தானெனும் சித்தாந்தம்=சிவமே ஜீவாத்மா. அணுவன்=ஜீவன்.

"நானென்றுந் தானென்று நாடினே னாடலு
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கின
னானென்று நானு நினைப்பொழிந் தேனே."

12. பிரகிருத நூலானது மேற்கண்ட இருவித மார்க்கங்களையும் ஸமரஸப்படுத்தி வடமொழிப் பயிற்சியில்லாத தமிழர்களின் பொருட்டே ஒரு மஹா முனிவரால் அருளப்பட்டது. அநேக பாசுரங்கள் உபநிஷத் வாக்கியங்களையே *தமிழில் மொழிபெயர்த்து இசைக்கப்பெற்றன போலவே காணப்படும். உதாரணமாக:—

i. "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே|
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்
நந்யோ அபிசாகஶீதி||" 3-வது முண்டகம் 1 (1)

"அன்ன மிரண்டுள வாற்றங் கரையினிற்
றுன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே"

ii. "அவித்யாயாமந்தரே வர்த்தமாநா:
ஸ்வயம் தீரா: பண்டிதம்மந்யமாநா:|
ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா:
அந்தேநைவ நீயமாநா யதாந்தா:||" 1-வது முண். 2 (8)

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடி
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

iii. வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச|
பாகோ ஜீவஸ்ஸ விஜ்ஞேய: ஸ சாநந்த்யாய கல்பதே||

ஶ்வேதாஶ்வதரோபநிஷத் 5-ம் அத். 9-வது மந்த்ரம்.

"மேவிய சிவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது வாயிர மாயினு
லாவியின் கூறுநூ றாயிரத் தொன்றே"

இவைபோன்றவைகளை இந்நூலின்கண் அநேக விடங்களிற் காணலாம்.

13. வேதம், உபநிஷத், ஆகமம், நீதிமுறைநூல், யோகமுறை நூல், எல்லாவற்றையும் ஒருங்குசேர்த்துத் தமிழர்களின் பிரயோஜநார்த்தம், உயர்நலமமைந்த இந்நூல் ஈச்வரன் அருள் பெற்ற ஒரு மஹா முனிவரால் அருளப்பெற்று நமக்குக் கிடைத்திருக்கும் பெரும் பாக்கியம். இது ஞாந நிதியாம், ஞாநக்களஞ்சியமாம். எந்த விஷயத்திற்கும் கருவூலமாக (பொக்கிஷமாக) மதிக்கத்தக்கது. இவ்வருமை பெருமையை யறிவிக்கும் பொருட்டே, இந்நூலின் 3000 பாசுரங்களிருப்பதில் ஒவ்வொரு பாசுரத்தையும், ஓர் ஓர் ஆண்டின் தபஸின் முடிவின்மேல் அம்மஹான் வாய்திறந்து அருளிச் செய்தார் என்று கர்ண பரம்பரையான வரலாறு உள்ளது அந்த வரலாறு அர்த்தவாதம் என்று வைத்துக்கொண்டாலும் சரி, உண்மையென்று வைத்துக்கொண்டாலும் சரி, ஒவ்வொரு பாசுரமும் ஓர் ஓர் ஆண்டு மநநம் பண்ணக்கூடியபடி அவ்வளவு அர்த்தம் அடங்கப் பெற்றிருக்கிறது. நாம் நினைத்து அப்படியே அநுஷ்டிக்கலாம். ஞாநமுறைப்பயிற்சியில் அர்த்தத்தை விக்ஞாநத்தால் மாத்திரம் கிரஹித்தல் போதாது. அவ்வர்த்தத்தைத் தந்மயப்படுத்தி அநுபவ ஸித்தமாக ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதன் மூலமாகத் தான் மெய்யுணர்வு பெறுதலாகும். இதனால் ஏற்படும் உண்மையான உபதேசம் யாதெனில், ஓர் ஓர் பாசுரத்தை தீர்க்க காலம் மநநம் செய்தால் மிக நலம் சுரக்கும் என்பதாம்.

(இன்னும் வரும்.)

மாதவன்.

துகாராம் பாவாவின் சரித்திரம்.

(29-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி துகாராம் தன் முன்னோர்கள் ஏற்படுத்தின கோவிலில் இரவும் பகலும் இருந்துகொண்டு பஜனை, பூஜை முதலிய நித்தியகர்மங்களை ஆரம்பித்தார். அதிகாலையில் எழுந்து ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு விட்டோபா பிரதிமையின் பூஜை செய்வார். மற்ற காலத்தில் காட்டில் உட்கார்ந்து காலம் போக்குவார். தேஹூ ஊருக்கு மேற்கில் 3 கோச தூரத்தில் பாண்டார் என்ற ஒருமலை உண்டு. அதின்பேரில் அடிக்கடிபோய் உட்காருவார்; விட்டோபாவின் தியானத்தையும் பஜனையையும் தடையற்றுச் செய்வார். சாயங்காலம்வந்தவுடன் கோவிலுக்குத் திரும்பி அதிப்பிரீதியுடன்போய் பஜனை செய்வார். இந்த விர்த்திவைக்கண்டு ஜநங்கள் அநேகவிதமாகப் பேச ஆரம்பித்தார்கள். இவருக்குப் பைத்தியம் பிடித்தபடியால் இரவும் பகலும் விடாமல் நாமஸ்மரணை செய்கிறார் என்று சிலர் சொல்லுவார்கள். வியாபாரத்தில் நஷ்டம் வந்தபடியால் இப்படிச் செய்கிறான் என்று சிலர் சொல்லுவார்கள். பத்திரங்களைக் கிழித்துக் குடும்பத்தை விட்டு இவன் செய்தது என்ன, இவன் வயிறு இவனைவிட்டதா, வயிற்றைநிரப்ப ஊருக்குள்வந்து வீட்டுக்கு வீடு பிக்ஷைவாங்க வேண்டியதாகவே யிருக்கிறது, என்று சிலரும் பிரதிதிநம் காட்டிலாவது மலையின் பேரிலாவது உட்காருவதில் பிரயோஜநமென்ன என்று அவர் பக்ஷத்தையே எடுத்துக்கொண்டு சிலரும் பரிஹாசமாகச் சொல்லுவார்கள்.

"சும்மா உட்கார்ந்து கொண்டு அவரைத் தூஷிக்கிறீர்கள். இதுவரையில் ஸம்ஸாரத்தில் விபத்து வந்ததினால் அவர் அதைவிட்டு ஈசுவர பஜனைசெய்கிறார். இதுநல்லதன்று? ஸம்ஸாரத்தில் எவ்வளவு துக்கமிருந்தாலும் அதை விட்டுவிட ஒருவனுக்கும் இஷ்டமில்லை என்று நாம் நினைக்கிறோம். இவரோ ஸம்ஸாரத்தைக் காலால் உதறி விட்டு வைராக்கியமடைந்திருக்கிறார். இது சிறியகாரியமன்று." இப்படி எவனுக்கு எது தோன்றுமோ அப்படி அவனவன் துகாராம் விஷயமாய்ப் பேச ஆரம்பித்தான். ஆனால் துகாராமருக்குமட்டும் ஒரு வார்த்தையும் பாதிக்கவில்லை. அவருடைய மநஸ் எப்போதும் ஈசுவர தியானத்திலிருந்து நிஜபக்தி சுகாநுபவம் அவருக்குக்

கிடைத்துவிட்டபடியால் ஜநங்களுடைய பேச்சுவார்த்தை அவர் காதில் ஏறவில்லே. அவர் நிச்சயம் நிச்சயமே. தன் அந்தியகாலம் வரையில் பக்தியிலிருந்து நழுவவில்லே. ஸம்ஸாரத்தில் மறுபடியும் மோஹமடையவில்லே. அவருடைய வைராக்கியம் பிரஸவவைராக்கியம் போலவாவது ஸ்மசாந வைராக்கியம் போலவாவது இருக்கவில்லே. டம்பமோ கொஞ்சங்கூட இல்லே. ஜந்மம் முடியும் வரையில் ஒரே மாதிரியாக இருந்துவிட்டார். இந்த வைராக்கிய விர்த்தியில் அவர் செய்ததை இனிச் சொல்லுவோம்.

வைராக்கிய விர்த்தி.

இவ்விதமாக ஸம்ஸார சிந்தையாகிறதாபம் நிவிர்த்தியாகி,மாஸ்மிக சாந்தியடைந்த பின் துகாராம் தன்னுடைய காலத்தையெல்லாம் ஈசுவர பஜனையிலும் பூஜையிலும் ஆத்மியாத்மிக ஞாந ஸம்பாதிபத்திலும் போக்கினர். தன்னுடைய முன்னேர்கள் கட்டிவைத்த விட்டோபா கோவில் அதிக க்ஷீணதியடைந்திருந்தபடியால் தேஹு நகரத்தாரின் சாதகத்தால் அதைப் பழுதுபார்த்தார். இந்த வேலே நடந்துவருகையில் துகாராம் வேலேயாள்போல் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தானும் வேலேசெய்வார். ஒவ்வொரு ஏகாதசிதினமும் உத்ஸவம் செய்வார். கதை செய்கிற எவனேயாவது அழைத்துத்தான் பின்நின்று தாளம் வீணே வாசித்து கதை நடத்துவார். கீர்த்தனே முடிந்த பிறகு இரவு முழுவதும் விழித்துக்கொண்டு பஜனே செய்வார். மறுநாள் சக்திக்குத் தக்கபடி பிராஹ்மண போஜநம் செய்து வைத்து பாரணேசெய்வார்.கோவிலில்,பெருக்குதல், கோமயத்தால் சுத்தி செய்தல் முதலியகாரியத்தைத் தானே செய்வார். வழிப்போக்கன் அங்கு வந்தால் தன்னுல் ஆனமட்டும் விசாரிப்பார். வந்தவன் பசியால் வருத்தப்பட தன்கையில் ஒன்றுமில்லாவிட்டாலும், வெகு சிரமப்பட்டு போஜந சாமக்கிரியை சேர்த்துக்கொடுப்பார். வழிநடையால் கால்வீங்கினவர்களுக்கு வெந்நீர் வைத்துக்கொடுப்பார். கைகால்பிடித்து சிரமத்தைப் போக்கி வைப்பார். சாதுக்கள் வந்தால் அவர்களிடம் ஆத்மாநாத்ம விசாரத்தை வெகுபக்தியுடன் கேட்பார்.வியாதியுடன் வருபவனேத் தன் தாயாரைப்போல பாவித்து சுசுருஷை செய்வார். தாகத்துடன் வரும் வழிப்போக்கர்களின் தாக சாந்திக்காக மார்க்கத்தில்

தண்ணீரை நிரப்பிவைப்பார். சிரோபாரத்தால் வருத்தப்படும் வழிப்போக்கனை உத்ஸாஹ வார்த்தையால் சுகப்படுத்துவார். காட்டில் விடப்பட்ட ஊரிலுபயோகப்படாத ஆடுமாடுகளைத் தான் மேய்த்துக் காப்பாற்றுவார். மொத்தத்தில் எந்தப்பிராணியாவது விபத்தில் இருப்பதாகக் கண்ணில் பட்டவுடனே போய் தன்னால் ஆனமட்டும் சாதகம் செய்வார். பிராஹ்மணனுடைய வீட்டில் ஸ்தல சுத்தி செய்தல் முதலிய எந்தவேலையையும் அதிகப்பிரீதியுடன் செய்வார். யார் எதைச் சொன்னாலும் இல்லை என்ற வார்த்தை அவர் வாயினின்று வரமாட்டாது. சகல பூதங்களிடத்திலும் ஸம திருஷ்டி ஏற்பட்டபடியால் ஒரு பிராணியையும் துக்கிக்கலாகாது என்பது அவருடைய நிச்சயம். இப்படிப் பிறருக்கு உபயோகப்படு வதில் அவருக்கு வெகு சந்தோஷம் தோன்றும். தான் கிலுப்தமாய் அற்ப ஆஹாரத்தைச் செய்து, நித்திரையும் கொஞ்சமாகவே செய் வார். நாள் முழுவதும் பிறருக்கு உபகாரம் செய்திருந்தால் நித் திரை சீக்கிரம் வரும். இது பஜனைக்கு விரோதமாகும். இதைத் தடுக்கும் பொருட்டு தன் குடுமியில் கயிறுகட்டி எங்கேயாவது மாட்டுவார். பஜனை செய்கையில் கண் அசைந்தால் உடனே குடுமி இழுபடுவதால் தான் விழித்துக்கொள்ளுவார். பிறகு முன்போலவே பஜனை நடத்துவார்.

இவ்விதமாக துகாராம் பிக்ஷை எடுத்துத் தன்னையும் தன் ஸம் ஸாரத்தையும் போஷித்து வருகையில் ஒரு நாள் என்ன சம்பவித்த தெனின், இந்திரியாணீ நதீதீரத்திலிருந்து ஒரு குடியானவனு டைய வயலில் பயிர் பக்குவத்திற்கு வரும் சமயத்தில் அந்தக் குடி யானவன் வேறு ஒரு ஊருக்குப்போய் காரியம் விலக்கு வாங்கு ம்படி நேரிட்டது. அவன் தன்னுடைய வயலைப் பார்த்து வரும் பொருட்டு ஒரு ஆளைத் தேடும்படி நேரிட்டது. அவனுடைய வய லுக்கு அடுத்திருந்த விட்டோபா கோவிலில் துகாராம் இரவும் பகலு ம் பஜனை செய்து கொண்டிருந்ததை ஸ்மரித்து, பரண்மேல் உட்கா ர்ந்து ஏன் வயலைப் பார்த்துக்கொள்வாயா என்று அவனைக் கேட் போம் என்பதாக அந்தக் குடியானவனுக்குத் தோன்றிற்று. அவன் துகாராமரிடம் வந்து, துகாராம் பாபா! நீர் நாள் முழுமையும் இந்த க்கோவிலில் பஜனை செய்கிறீர்; என் வயலிலிருக்கிற பரண்மேல் உட்

கார்ந்து பஜனை செய்து வந்தால் என் பயிரும் காப்பாற்றப்படும், உம்முடைய ஈசுவர பஜனையும் நடந்துவரும். நான் வெளி ஊருக்குப் போகவேண்டியதாக இருக்கிறது. நான் திரும்பிவர ஒருமாதம் செல்லும். அதுவரையில் என்னுடைய தான்யத்தைப் பார்த்து வந்தால் உமக்கு அரைமணு தான்யம் கொடுப்பேன் என்று சொன்னான். இதைத் துகாராம் அங்கீகரித்து அவனுடைய பரண் மேல் போய் உட்கார்ந்தார். உடனே குடியானவன் யாதொரு கவலையுமின்றி தான் உத்தேசித்த ஊருக்குப் போய்விட்டான். துகாராம் பரண்மேல் உட்கார்ந்தவர் அதைவிட்டு அசையவேயில்லை. அவருடைய ஸம்ஸாரம் அவலாயி அம்மாள் இரண்டுப்ரஹாரங்கள் வழிபார்த்தாள். அவர் போஜநம் செய்யுமுன் அந்த அம்மாள் ஜலபாநம் செய்யமாட்டாள். அப்போது அவரைத்தேடும்படி தன் பெண்ணை அனுப்பினாள். அவள் கோவிலுக்கு வந்து பார்த்தாள். அங்கேயோ அவர் இல்லை. பிறகு தேடித்தேடி அந்தப் பரண் சமீபம் வந்தாள். வீட்டுக்கு வரவேண்டும் என்று பிரார்த்தித்தாள். நான் பயிரைக் காத்துக்கொண்டிருக்கிறேன். என் ஆகாரத்தை இங்கேயே கொண்டுவா என்று துகாராம் சொன்னார். அப்படியே அவலாயி அம்மாள் ஆகாரத்தை வயலுக்கு அனுப்பினாள். இப்படி பிரதிதிநமும் அவர் காலை தொடங்கி அஸ்தமநம் வரையில் பரண் மேல் உட்கார்ந்து கொண்டே பஜனை செய்து கொண்டு வருவார். அதிகாலையில் எழுந்து ஸ்நாநாதிகளைச் சுருக்கிக்கொண்டு விட்டோபாவின் பூஜைசெய்துகொண்டு கைரேகை தெரிந்தும் தெரியாமலுமிருக்கும் போது பரண்மேல்வந்து உட்காருவார். இரவு வந்தவுடன் கோவிலுக்குப்போய் ஸம்ஸாரம் அனுப்பின ஆகாரத்தை எடுத்துக்கொண்டு தேவ பஜனையில் முழுகிப்போவார். ஆனால் இவரால் பயிர் சுத்தமாகக் காப்பாற்றப்படவில்லை. பயிர்மேல் வந்து உட்கார்ந்த பக்ஷிகளை வெருட்டுவது மிகவும் க்ரூரமான காரியம் என்று அவருக்குத்தோன்றிற்று. முந்தின க்ஷாமகாலத்தில் இந்தப் பக்ஷிகளுக்குத் தின்ன ஒன்றும் அகப்படாமல் பட்டினியாக இருந்திருக்கலாம். இப்போது ஸ்வாமி கிருபையால் மழை நன்றாய்ப் பெய்து தான்யம் பக்குவமாகிவருகிறது. ஆகையால் வயிறு நிறைய இவைகளைத் தின்னும்படி செய்யவேண்டும். இவைகளை வெருட்டக்

கூடாது. இந்தப் பக்ஷிகளோ பசி தீர்க்கவேண்டியதற்கு எவ்வளவு வேண்டியதோ அவ்வளவையே தின்னுகின்றன. வீட்டுக்கு ஒரு உணவையும் கொண்டுபோகவில்லை. ஆகையால் அபேக்ஷையன்றியிருக்கிற இந்தப் பக்ஷிகளின் வாயிலிருந்து தான்யத்தைப் பிடுங்குவது மஹாபாபம். இப்படிநினைத்து அவர் அந்தப்பக்ஷிகளை வெருட்டவேயில்லை. இதனால் பக்ஷிகள் கூட்டம் கூட்டமாய் நாள்தோறும் வந்து உட்கார ஆரம்பித்தன. இப்படி ஒருமாதமும் நடந்து வந்தது. பிறகு குடியானவன் ஊருக்குத் திரும்பிவந்து பயிர் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அங்கும் இங்கும் சோதனை செய்ததில் ஒரு இடத்திலும் தான்யம் பூராவாகக் காணப்படவில்லை, வெகு வருத்தமடைந்து துகாராம் பாவாவைப் பரண்மேலிருந்து கீழே இழுத்து, உதைத்து கல்தா" கொடுத்துக் கொண்டே கிராம அதிகாரிகளிடம் கொண்டுபோனான். அந்த அதிகாரிகள் குடியானவன் சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டு, துகாராம் பாவாவை வாஸ்தவமாய் என்ன நடந்தது என்று கேட்டார்கள். நடந்த சங்கதியைச் சொன்னவுடன் அவர்கள் சிரித்தார்கள். குடியானவன் நஷ்டமடைந்ததைப்பார்த்து துகாராமரிடமும் ஒன்றுமில்லாததையும் பார்த்து துகாராம் ஒரு கடன் சீட்டு எழுதிக்கொடுக்கவேண்டியது என்று தீர்மானித்தார்கள். இது குடியானவனுக்கும் சம்மதமாயிருந்தது. அவனுக்கு என்ன நஷ்டம் என்று கேட்க, அவன் அதைச்சொல்லி துகாராமரிடம் அந்தத்தொகைக்குப் பத்திரம் வாங்கிக்கொண்டான்.

இவ்விதமாக துகாராமருக்கு ஸகல பிராணிகளிடத்திலும் ஸமதிருஷ்டி யுண்டானபடியால், லோகதிருஷ்டியால் பார்க்கும் போது அவர் செய்கையெல்லாம் பைத்தியகாரன் செய்கைபோல் காணப்பட்டது. நான், என்னுடையது என்கிற பாவங்கள் போய் சமம்,தமம், கருணைமுதலிய ஸத்விர்த்திகளே மேலிட்டு வந்தன. சரீரத்தால் பிறருக்காக உழைப்பதே முக்கியகாரியம் " என்று அவருக்குத் தோன்றிற்று. தான் வேறு,மற்றவர்கள் வேறு என்ற ஞாபகம் போய் ஸமஸ்தத்திலும் விட்டோபா ரகுமாபாயி இவர்களே இருக்கிறார்கள் என்ற நிச்சயமே புலப்பட்டது, இந்த நிச்சயத்தை அநுசரித்தே ஸகல வியவஹாரத்தையும் நடத்த ஆரம்பித்தார். எவளாவது அல்லது எவனாவது பேசவந்தாலும் "தாயே! ஐயாவே!"

என்றுதான் மறுமொழி கொடுப்பார். யாராவது வேலையிட்டால் "செய்கிறேன் ஐயாவே அல்லது அம்மா" என்று சொல்லி மநப்பூர்வமாகச் செய்வார். ஒருதரம் ஒரு கிழவி எண்ணெய் வாங்கும் பொருட்டு சீசாவை எடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குப்போகையில் அவளுக்குச் சக்தியில்லாமல் நாலடி நடப்பாள், உட்காருவாள், மறுபடியும் நாலடி நடப்பாள், உட்காருவாள். இந்த அவஸ்தையைக் கண்டு அவளிடம் ஓடிப்போய், தாயே உமக்கு நடக்க சக்தியில்லை, என் முதுகில் ஏறி உட்காரும், கடைக்குக் கொண்டுபோய் விடுகிறேன், மறுபடியும் வீட்டுக்குக் கொண்டுபோய் விடுகிறேன் என்று சொன்னார். தாய் என்கிற சப்தத்தைக் கேட்டவுடன் அவள் வெகு சந்தோஷமடைந்து, அப்பா! என்னைத் தூக்கிக்கொண்டு போகிற சிரமம் நீ எடுக்கவேண்டியதில்லை, என் சீசாவையும் இந்தப் பணத்தையும் கொண்டுபோய் எவ்வளவு எண்ணெய் வருமோ அவ்வளவு கொண்டுவந்து கொடுத்தால் போதும் என்றாள். அப்படியே துகாராம் எண்ணெய் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார். இந்த சங்கதி மற்றவர்களுக்குத் தெரிந்தவுடன் அவர்களும் எண்ணெய்ச் சீசாவைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். கழுத்தில் ஒருபையைமாட்டி அதில் எல்லாரும் பணத்தைப்போட்டு சீசாக்களைக்கொடுக்க ஆரம்பித்தார்கள். துகாராம் கடைக்குப்போய் எண்ணெயை வாங்கி அவரவர்களுக்குக் கொண்டுவந்து கொடுப்பார். இப்படி இருக்கையில் அநேகம் பேர்கள் சீசாக்களைக் கொடுக்க ஆரம்பித்தார்கள். எவன் எவனுக்கு எவ்வளவு எண்ணெய் என்று ஞாபகத்துக்கு வராமல் தட்டுக்கெட்டுப் போகவே எல்லாருக்கும் நஷ்டம்உண்டாகி இவரிடம் கொடுப்பதை விட்டு விட்டார்கள். இந்த ஒரு செய்கையினால் துகாராமரிடம் அகங்காரம் என்பது எவ்வளவு வரையில் இல்லாமற் போய்விட்டது என்பது வியக்தமாய்த் தெரியவரும். எண்ணெய்ச் சீசாவைக் கொடுக்காமற் போனாலும் இவன் பைத்தியகாரன், இவனால் ஆகக்கூடிய காரியத்தை இவனிடம் இருந்து செய்து கொள்ளவேண்டுமென்று ஜநங்கள் நினைத்து இவரைக் கடைக்கு அழைத்துக்கொண்டுபோய் சாமான் மூட்டையை இவர் தலையில் வைப்பார்கள்.

(இன்னும் வரும்.)

A. சிவராவ்.

பிரஹ்மக்ஞாந தர்சநம் (பாலபாடம்.)

(21-ம் பக்கத் தொடர்ச்சி.)

௨-வது அத்தியாயம்.

ஸஹோதர பாவம்.

அநேக வருஷங்களுக்கு முன் எகிப்து தேசத்தில் சில ஐரோப்பிய சாஸ்திரிகள் தைலத்தினால் காப்பாற்றி வைக்கப்பட்டிருந்த ஒரு பிரேதத்தை (Mummy) சோதித்துப்பார்த்தபோது அதன் கையில் கொஞ்சம் கோதுமை தான்யம் இருக்கக்கண்டார்கள். அந்த தான்யத்திற்கும் நாம் ஸாதாரணமாக இக்காலத்தில் உபயோகிக்கும் கோதுமைக்கும் கொஞ்சமேனும் வித்தியாஸமில்லாமலிருந்தது. ஆனால் அந்தப் பிரேதத்தின் கையிலிருந்த தான்யமானது அநேக நூற்றாண்டுகளுக்கு முன் உண்டானதாகத் தெரிய வந்தது.

௨. அந்த சாஸ்திரிகள் அந்த தான்யங்களை விதைத்தார்கள். அவைகள் நன்றாய் வளர்ந்து பூர்த்தியான கதிர்களுடன் பலனளித்தன. ஆகையால் விதைகளை எவ்வளவு காலம் நாம் முளைக்கப்போடாமல் வைத்திருந்த போதிலும் சரியான இடத்தில் சரியான உரங்களுடன் நாம் அவ்விதைகளை முளைக்கப்போட்டால் அவைகள் முளைத்துப் பலனைக்கொடுக்குமென்பது நமக்கு நன்றாய்த்தெரிகிறது. அதுபோலவே வெகு காலத்திற்கு முன் மனிதர்களுடைய மனங்களில் விதைக்கப்பட்டிருந்த ஸநாதந ஞாந வித்துக்களுக்கு சரியான நிலைமையையும் சௌகர்யத்தையும் நாம் ஏற்படுத்தும்போது, அதாவது ஒரு பள்ளிக்கூடம் அல்லது வீட்டில் ஒரு உபாத்யாயர் நமக்குள் பொறுமை, விடாமுயற்சி இவைகளை ஏற்படுத்தும்போது அவைகளும் வளர்ந்து விருத்தியடையும்.

3. ஒவ்வொரு மனிதனுடைய மனத்திலும் இந்த வித்துக்களின் சிலபாகம் இருக்கின்றது. இந்த வித்துக்கள் தைவிக அரசர்களால் மானிட ஹிருதயத்தில் விதைக்கப்பட்டு வம்ச பரம்பரையாய் மனித ஸ்வபாவமாக அமைந்து வருகிறது.

4. இதுவல்லாமலும் நம்மிடத்தில் ஈசுவரத்தன்மையுள்ள வித்துக்களும் இருக்கின்றன. அவைகளை நாம் ஜாக்கிரதையாயும்

திர்மானத்துடனும் அபிவிருத்தி செய்தால் அவைகள் ஈசுவர சக்தி களாக வெளிப்படும்.

5. இந்த சக்திகளும் ஞானவித்துக்களைப்போலவே வெகுகால மாய் விருத்திக்கு வராமல் நமக்குள் புதைந்து குப்தமாகக்கிடந்தன. அவ்வித்துக்களை நாம் கண்டு பிடித்து அவைகள் வளரும்படியாய்நம் முடைய ஹிருதயங்களை அன்பினால் மிருதுவாக்கிப் பக்குவப்படுத்தி னாலொழிய அவைகள் வளரமாட்டா.

6. அதற்காக நாம் என்ன செய்யவேண்டியதென்றால், ஒவ் வொரு மானிட ஜீவனிடத்திலும் நாம் மெய்யன்பு பாராட்டவேண் டும். நாமெல்லோரும் ஸஹோதரர்களே. ஏனெனில் நம்மெல்லோ ருக்கும் ஒரே தகப்பன் கடவுளே. நாம் அவருடைய சொந்தப்பிள் ளைகள். அவருடைய அம்சர்கள். அவருக்குவேறாகவும் அவரைக் கைவிடக்கூடியவர்களுமான ஸ்வீகாரப் பிள்ளைகளல்லோம். இவ்வுல கில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களையெல்லாம் கற்றுக் கொண்டு திரும்பி அவரைப்போய்ச் சேரவேண்டியவர்களா யிருக் கிறோம்.

7. இவ்வுலகம் கடவுளுடைய பள்ளிக்கூடம். ஆரம்பத்தில் நாம் பள்ளிக்கூடத்திற் கடை வகுப்பில் வந்து சேருகிறோம். நாம் கற்றுக்கொள்வதற்குத் தக்கபடி ஒவ்வொரு வகுப்பாய் மேலேறிப் போகிறோம். எல்லாம் கற்றுக்கொண்ட பிறகு பள்ளிக்கூடத்திற் குப் போகவேண்டியதில்லை. அதாவது ஜநநமரணமாகிற ஸம்ஸா ரத்திற்குத் திரும்புகிறதில்லை.

8. கடவுளே அன்பாம். ஆகையால் தைவிக வித்துக்களான அன்பென்னும் வித்துக்களை நம்முடைய மநங்களிலும் ஹிருதயங்க ளிலும் விதைத்து அவைகள் வளர்ந்து கடவுளைப்போல நாமும் அன்பு ஸ்வரூபமாக அன்பாகவே ஆகவேண்டும். அதற்கு ஆரம் பம் மற்றவர்களை நாம் நேசிப்பதே. பிரத்யக்ஷத்தில் நம்முன் பார்க் கக்கூடிய ஸஹோதரர்களை ஒருவன் நேசியாவிட்டால், பார்க்கமுடி யாத கடவுளை அவன் எப்படி நேசிப்பான்? எப்படி அன்பு பாராட்டு வான்? கடவுளை நேசிப்பவன் தன் ஸஹோதரனையும் நேசிப்பான்

என்ற கட்டளை கடவுளாலேயே விதிக்கப்பட்டது என்று ஒரு பெரியார் சொல்லுகிறார்.

9. நாம் ஒவ்வொருவரையும் நேசித்தல் வேண்டும். அவன் நிறம் வெண்மை, கறுமை, சிவப்பு அல்லது மஞ்சளாகஇருந்தாலும், அவன் பணக்காரன் அல்லது ஏழையாயிருந்தாலும், அவன் விவேகி அல்லது மூடனாயிருந்தாலும், நல்லவன் அல்லது கெட்டவனாயிருந்தாலும் அவனை நாம் நேசிக்கவேண்டியது. நாம் சில பிராணிகளைச் செல்வமாய் வளர்க்கிறோம். நம்முடைய சுமைகளைச் சுமக்கவும் இன்னும் மற்றவிதமாயும் நமக்கு உபயோகமாயிருக்கிற ஜந்துக்களையும் நாம் நேசித்தல் வேண்டும். அந்தப் பிராணிகளை நாம் அவ்விதம் வளர்த்துக் காப்பாற்றாமல் காட்டுக்குத்துரத்திவிட்டோமானால், அவைகள் மறுபடியும் காட்டிற்போய் தாங்களே ஜீவநம் செய்யவும் தாங்களுக்கு ஆகாரத்தைத் தேடிக்கொள்ளவும் தங்குமிடத்தை ஸம்பாதித்துக்கொள்ளவும் இயலா.

10. "ஜீவராசிகளில் பெரிதும் சிறிதுமான எல்லாவற்றையும் எவன் நன்றாய் நேசிக்கிறானோ அவனே கடவுளை நன்றாய் ஆராதிக்கிறவனாவன். ஏனெனில், நம்மைப்படைத்த அன்புள்ள கடவுள்எல்லாரையும் நேசிக்கிறார்." இஃது ஒரு அறிஞர் வசநம்.

11. நாம் மரங்களையும் செடிகளையும் புஷ்பங்களையும் பாறைகளையும் கற்களையும் அவைகளில் வஸிக்கிற எல்லா ஜந்துக்களையும் நேசிக்கவேண்டும். ஏனென்றால், அவைகளிலுள்ள உயிரெல்லாம் கடவுளுடைய அம்சமேயாம்.* அவைகள் கீழான வகுப்புகளிலிருக்கின்றன. இதுதான் வித்யாஸம். பக்ஷிகளும் மிருகங்களும் ஊர்வன வகுப்பிலடங்கிய ஜீவராசிகளும் ஸஹோதர பாவத்தின் எல்லையைத் தொட்டுக்கொண்டிருக்கின்றன என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள்.

12. கடவுளுடைய பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்புக்களுக்குப் போகும் ஜந்துக்களுக்குப் பல வித்யாஸமான சரீரங்கள் கொடுக்கப்

---

* "எவ்வுயிரும்பராபரன் சந்நிதியதாகும் இலங்கும உயிருடலனைத்தும் ஈசன் கோயில்" என்ற வசநம் இங்கு கவனிக்சத்தக்கது.

படுகின்றன. கல் முதலிய தாதுவர்க்கங்களுக்கு மஹா கெட்டியான சரீரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலுள்ள கடவுளின் உயிரானது அசைவற்றிருக்கின்றது. ஒஷதிவர்க்கத்தின் சரீரங்கள் அதிக மிருதுவாயும் நீளுதலும் சுருங்குதலுமுடையவைகளாயு மிருக்கின்றன. அநேக பூச்செடிகள் ஸூர்யன் இருக்குந் திசையை நோக்கித் திரும்பும்; அல்லது இஷ்டப்பட்டால் ஒரு வஸ்துவைப் பிடித்துக்கொள்ளவும், இஷ்டமில்லாவிட்டால் அதை விட்டு விடவும் கூடும். கொடிகள் அடிக்கடி இவ்விதம் செய்கின்றன. பிராணிகளின் சரீரம் ஒஷதிவர்க்கத்தின் சரீரத்தினும் நேர்த்தியானது. அவைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லக்கூடும். அவைகளுக்கு நம்மைப்போல் ஐம்புலன்களுமிருக்கின்றன. மானிட சரீரமோ எல்லாவற்றிலும் மிகநேர்த்தியானது. ஆகையால் அப்படிப்பட்ட சரீரங்களில்வஸிக்கிற நாம் நமக்குக்கீழான எல்லாஜந்துக்களிடத்தும் அன்பு பாராட்டி அவைகளை ஆதரிக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

13. "உலகத்தில் இரக்கமானது மெலிந்தோனுக்கு சுகித்தையும் பலிஷ்டனுக்கு மேன்மையையும் தருகிறது." தன் பேரில் இரக்கமிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிற மனிதன் தன்னிலும் மெலிந்தோனுக்குத் தான் கடவுள்போலிருந்தும் அவனிடம் இரக்கம் பாராட்டுகிறானில்லையே! இது என்ன கொடுமை! எல்லா ஜீவர்களும் ஒன்றோடொன்று சங்கிலிபோல்கோவையாயும் உறவாயு மிருந்தும், ஆடுகள் நமக்குப் பாலையும் வஸ்திரத்திற்கு ரோமத்தையும் கொடுத்துக்கொண்டிருந்தபோதிலும், அவைகள் தம்மைக் காப்பாற்றுபவர்பால் பூர்ணமானவிசுவாஸத்தையுடையனவாயினும், சில மாம்ஸ பக்ஷணிகளான மனிதர்கள் சற்றேனு மிரங்காது அவைகளைத் தம் உணவிற்காகக் கொலை செய்கின்றனர்!

14. அநேக நூற்றாண்டுகளுக்கு முன் பகவான் புத்தர் இவ்விதம் கற்பித்தார். நம்மில் சொற்பமான பேர்கள்தான் இந்தப்பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படி நாம் கற்றுக்கொள்ளாததினால் காட்டு ஜந்துக்கள் நம்மைக் கண்டு ஓடுகின்றன. பூமி

யானது துன்பத்தாலும் குரூரத்தன்மையாலும் நிரம்பியிருக்கின்றது.

15. கடவுளுடைய குழந்தைகளிற் சிலர் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொண் டிருக்கிறபடியால் இவ்வுலகிற் செய்யவேண்டிய எக்காரியத்தையும் அவர்கள் செய்து முடிக்கக் கூடும். அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் பூர்த்தியான அன்பு பாராட்டுகிறார்கள். அதனால் அவர்களைக்கண்டு எந்தக் காட்டு மிருகமும் ஓடுகிறதில்லை. நாம் அருமையாய் வளர்க்கும் பூனை நம்முடைய பாதங்களில் விழுந்து புரளுகிறதுபோல், புலிகூட அவர்கள் பாதங்களில் புரளும். இவ்விதம் ரிஷிகளின் ஆச்சிரமத்தின் சமீபத்தில் துஷ்ட மிருகங்கள் தங்களுடைய இயற்கையான ஸ்வபாவத்தை மறந்து ஸஞ்சரித்தனவாக புராணங்களில் நாம் படித்திருக்கிறோம். இத்தகைய மனிதர்களுக்கு அழகும் பலமும் காம்பீர்யமும் நிறைந்த பூர்ணர் என்று பெயர். அவர்கள் திவ்ய சரீரிகள். அச்சரீரங்களுக்கு மூப்பும் ரோகமும் இல்லை. அவைகள் எவ்வளவு காலத்துக்குத் தேவையோ, அவ்வளவு காலம் பிரகாசமாயும் அழகாயும் இருக்கும். இவர்கள் தான் நாம் விசுவஸித்து நேசிக்கும் மஹாத்மாக்கள். அவர்களுக்கு ஸ்வதந்த்ரமாய்க் கிடைத்திருக்கிற மோக்ஷ பதவியையுந் துறந்து நமக்கு உதவி புரியும் பொருட்டு இவ்வுலகில் ஸஞ்சரிக்கிறார்கள். அவர்களே நம்முடைய மூத்த ஸஹோதரர்களாவார்கள், மஹா பலிஷ்டர்கள், உயர்ந்த தைர்யமுள்ளவர்கள், பரிசுத்தர்கள், தைவிக புனிதர்கள், நம்மைப் பாதுகாப்பவர்கள். ஸநாதந ஞாநத்தைக் காப்பாற்றி உலகத்தாருக்கு உபதேசிப்பவர்கள். ஆதிகாலத்து தைவிக அரசர்களுக்கு ஸமாநமானவர்கள். ஆனால் இவர்கள் உபதேசிக்கும் முறை இப்போது இக்காலத்திற்கேற்ப சொல்லில் கொஞ்சம் வித்தியாஸப்படும், பொருளில் வித்தியாஸமில்லை.

(இன்னும் வரும்.)

வி. வெங்குஸ்வாமி ஐயர்.

ஸங்க்ராந்தி அல்லது உத்தராயணம்.

(33-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

(3) மாக சுக்கிலாதியும் உத்தராயணமும்
(சுமார் கி. மு. 1500)

யதா மாகஸ்ய ஶுக்லஸ்ய
ப்ரதிபத்யுத்தராயணம் ।
ஸஹோதயம் ஶ்ரவிஷ்டாபி:
ஸோமார்கௌ ப்ரதிபத்யத: ॥ —கர்காசாரியர்

"மாக சுக்கில பிரதமையில் அவிட்ட நக்ஷத்ரத்துடன் (ஸூர்ய சந்த்ரர்கள்) கூடிய அமாவாஸ்யைக்குப் பிறகு உத்தராயண ஆரம்பம்"

த்வௌ த்வௌ மாகாதிமாஸௌ ஸ்யாத்ருது:
தைரயனம் த்ரிபி:—அமரம் I-iv-13.

"மாக மாஸம் முதல் இரண்டு இரண்டு மாஸங்கள் கொண்டது ஒரு ரிது. மூன்று ரிதுக்கள் கொண்டது ஒரு அயநம்."

தத்ர மாகாதயோ த்வாதஶ மாஸா: ।
த்விமாஸிகம் ருதும் க்ருத்வா ஷட்ருதவோ பவந்தி ।
தே ஶிஶிரவஸந்தக்ரீஷ்மவர்ஷாஶரத்தேமந்தா: ।
அயநே த்வே பவத: । தக்ஷிணமுத்தரஞ்ச
தயோர்தக்ஷிணம் வர்ஷாஶரத்தேமந்தா: ।

—சுசுருதர் ஸூத்ரஸ்தாந அத். 6.

"மாக மாஸம் முதல் 12 மாசங்களில், 2 மாஸம் ஒரு ரிது வீதம் 6 ரிதுக்கள் உண்டு. அவைகள் சிசிர, வஸந்த, கிரீஷ்ம, வர்ஷ, சரத், ஹேமந்த ரிதுக்கள். அயநங்கள் இரண்டு—தக்ஷிணாயநம், உத்தராயணம். வர்ஷ சரத், ஹேமந்த ரிதுக்கள் தக்ஷிணாயநத்தைச் சேர்ந்தவை."

மாஸைர் த்விஸங்க்யைர் மாகாத்யை:
க்ரமாத் ஷட்ருதவ: ஸ்ம்ருதா:
ஶிஶிரோऽத * * * *

அஷ்டாங்க ஹிருதய ஸூத்ரஸ்தாநம் I (1)

"மாக மாஸம் முதல் இரண்டு மாஸங்கள் கொண்ட ரிதுக்கள் சிசிரரிது முதலான ஆறு ரிதுக்களிருக்கின்றன."

இதனால் முன் ஒரு காலத்தில் மாக மாஸாதியில் அமாவாஸ்யைக்குப் பிறகு சுக்லப் பிரதமையில் உத்தராயணதி ஸம்பவித்த தென்றும் தெரியவருகிறது.

இக்கால நிர்ணயம்:—வராஹ மிஹிரர் காலத்தில் மகராதியான உத்தராயணதி பௌஷ்ய சுக்லப் பிரதமையில் ஸம்பவித்ததாலும் இப்பொழுது சொல்லும் காலத்தில் மாக சுக்லப் பிரதமையில் ஸம்பவித்ததாலும் இவ்விரண்டு திநங்களுக்கும் வித்யாஸம் சாந்த்ர மாந மான சுமார் 2 பக்ஷங்களாகின்றன.

ஒரு பக்ஷம் விஷு அபஸரிப்பதற்கு 1,000 வருஷங்கள் வீதம், 2 பக்ஷங்களுக்கு 2000 வருஷங்கள் செல்லும். ஆதலால் இக்காலமானது (2000—500) 1500 கி. மு. என்று நிர்ணயிக்கப்படுகின்றது.

(4) மஹா பாரத காலமும் உத்தராயணதியும் (சுமார் கி. மு. 2000.)

மஹா பாரதம் அநுசாஸந பர்வத்தில் பீஷ்மருடைய மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுமிடத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

𑌮𑌾𑌘𑍋𑌯𑌂𑌸𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃𑌮𑌾𑌸𑌃𑌸𑍌𑌮𑍍𑌯𑍋𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰।
𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌶𑍇𑌷𑌃𑌪𑌕𑍍𑌷𑍋𑌯𑌂𑌶𑍁𑌕𑍍𑌲𑍋𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿॥

"யுதிஷ்டிர! மாகமாஸம் நடக்கின்றது. இது நல்ல மாஸம். கால் மாதம் கழிந்துவிட்டது.. சுக்ல பக்ஷமிது" (அதாவது இந்த சுலோகத்தால் மாகசுக்லாஷ்டமி குறிக்கப்படுகிறது.)

𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌨𑌕𑍍𑌷𑌯𑌨𑌂𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑍇।
𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌚𑌾𑌷𑍍𑌟𑌮𑍍𑌯𑌾𑌂𑌮𑌾𑌘𑌮𑌾𑌸𑌸𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵॥

"அரசனே! ஸூர்யன் வடக்கு முகமாய்த் திரும்பினவுடன் மாகமாஸ சுக்கில அஷ்டமியில் (பிரஜாபதியை அதிஷ்டாந தேவதையாயுடைய) ரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஸூர்யன் உச்சியில் பிரகாசிக்கையில் பீஷ்மர் தன் யோக பலத்தால் பரமாத்மாவுடன் தன் ஜீவாத்மாவைச் சேர்ப்பித்தார்.*

* குறிப்பு:—இதே திநத்தில் பீஷ்மாஷ்டமி என்று பீஷ்மதர்ப்பணம் செய்வது இன்னும் சில இடங்களில் அநுஷ்டாநத்திலிருப்பதைக்கவனிக்க.

மேற்கூறிய ஆதாரங்களால் மஹாபாரத காலத்தில் உத்தராயணுதி

(1) மாகமாஸம் (தை அமாவாஸ்யைக்குப் பிறகு) எட்டாவது தினத்தில் ஸம்பவித்தது.

(2) அன்று ரோஹிணீ நக்ஷத்திரம்.

(3) மாக மாஸத்தில் கால்மாதம் ($7\frac{1}{2}$ தினங்கள் சென்றுவிட்டன.

இதனுல் பௌஷ்ய சுக்கிலப் பிரதமை முதல் மாக சுக்ல அஷ்டமிவரை சுமார் $2\frac{1}{2}$ பக்ஷங்களாகின்றன. அதாவது முன் கூறிய விவரப்படி பக்ஷமொன்றுக்கு 1000 வருஷங்கள் வீதம் 1000 × $2\frac{1}{2}$ வராஹமிஹிரர் காலத்துக்குச் சுமார் 2500 வருஷங்களுக்குமுன் அதாவது (2500—500 = கி. மு. 2000 வருஷகாலமே மஹாபாரத காலமென நிர்ணயிக்கப்படுகின்றது.*

முன் கூறியபடி மஹாபாரதகாலத்தில் உத்தராயணுதி 308–வது அம்சத்திலிருப்பதனுல் வஸந்தவிஷு (308+90 = 398வது அதாவது 38–வது அம்சத்திலும் தக்ஷிணுயநாதி 128–வது அம்சத்திலும் சரத்விஷு 218–வது அம்சத்திலுமிருக்கவேண்டும். அடியில் கண்ட ஆதாரங்கள் இந்நிலைமைகளைக் குறிப்பிடுகின்றன:—

ஸ்ரவம்வா ஏதந்நக்ஷத்ராணாம் யத்க்ருத்திகா:

—தைத்திரீய பிராஹ்மணம் I-i-?-(1)

"நக்ஷத்ரங்களுக்கெல்லாம் முகம் ஆரம்பம் கிருத்திகை."

கிருத்திகை நக்ஷத்ரம் மேஷாதியாய் 37·30, அம்சத்திலுள்ளது.

---

* குறிப்பு:—இவ்விஷயத்தைப்பற்றி இன்னும் இதர ஆதாரங்களுடன் மஹாபாரத கால நிர்ணயம்(Date of Mahabharatha War)என்னும் ஆங்கில வியாஸத்தில் விவரமாய்க் காணலாம்.

𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑌾𑌵𑍈 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿।
𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂। 𑌵𑌿𑌶𑌾𑌖𑍇 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂।
𑌤𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿। 𑌅𑌨𑍂𑌰𑌾𑌧𑌾𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂।
𑌅𑌪𑌭𑌰𑌣𑍀𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌂। 𑌤𑌾𑌨𑌿 𑌯𑌮𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿।
𑌯𑌾𑌨𑌿 𑌦𑍇𑌵𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌨
𑌪𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑌿। 𑌯𑌾𑌨𑌿 𑌯𑌮𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿
𑌤𑌾𑌨𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣।

—தைத்திரீய பிராஹ்மணம் I-v-2-(7)

"நக்ஷத்ரங்கள் தேவர்களின் கிருஹங்கள். கிருத்திகை முதல் விசாகம் முடியவுள்ளவை தேவ நக்ஷத்ரங்கள். அநுஷம் முதல் (அப) பரணி முடியவுள்ளவை யம நக்ஷத்ரங்கள். தேவ நக்ஷத்ரங்கள் தென்பக்க முள்ளவை. யம நக்ஷத்ரங்கள் வடபக்க முள்ளவை."

இதில் கிருத்திகை என்பது யோக தாரையையே குறிக்கிறதென்றும், நக்ஷத்ரபாகத்தை யல்லவென்றும், தென்பக்கம், வடபக்கமென்பது பூமத்ய ரேகைக்குத் தென்பக்கம், வடபக்கமென்றும் வித்வத்ஸ்ரீ திலகர் அபிப்பிராயப் படுகின்றார் என்பது அவர் எழுதிய மிருகசீர்ஷகாலம் (Orion) என்னும் புஸ்தகத்தில் கிருத்திகை என்னும் அத்யாயத்தைப் பார்த்தால் தெரியவரும்.

𑌆𑌸𑌨𑍍 𑌮𑌘𑌾𑌸𑍁 𑌮𑍁𑌨𑌯𑌃
𑌶𑌾𑌸𑌤𑌿 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌂 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑍇 𑌨𑍃𑌪𑌤𑍌
𑌷𑌡𑍍𑌦𑍍𑌵𑌿𑌕𑌪𑌂𑌚𑌦𑍍𑌵𑌿𑌯𑍁𑌤𑌃
𑌶𑌕𑌕𑌾𑌲𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌞𑌶𑍍𑌚

—பிருஹத்ஸம்ஹிதை 13-வ. அத்.

"யுதிஷ்டிரர் அரசாண்ட காலத்தில் ஸப்த ரிஷிகள் மகத்திலிருந்தார்கள். அவ்வரசனுடைய காலம் (Era) இப்பொழுது 2526 வருஷங்களில்."

அதாவது வராஹமிஹிரர் காலமானது 500 கி. பி. ஆகையால், (2526—500) = 2026 கி. மு. ஆகின்றது. இவ்வாதாரமும் மஹாபாரத காலம் சுமார் கி. மு. 2000 வருஷமென்று குறிக்கின்றது.

(5) ரதஸப்தமியும் உத்தராயணதியும்

இந்த ஸந்தர்ப்பத்தில் நமது நாட்டில் அநுஷ்டிக்கப்படும் வைதிகபித்ரு திநங்களில் ஒன்றான ரதஸப்தமி என்பதைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். ரதஸப்தமி யென்றால் இதுவரை தெற்கு முகமாய்ச் சென்று கொண்டிருந்த ஸூர்யனுடைய கதி வடக்கு முகமாய்த் திரும்பும் திநமென்று அர்த்தமாகும். மாக சுக்லஸப்தமியே ரதஸப்தமி. அதாவது தை அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் 7-வது திநமான ஸப்தமியாம். இதுவும் அநேகமாய் பீஷ்மாஷ்டமியை யடுத்திருப்பதால், ஒருவேளை இரண்டும் ஒரே ஆசரணையால் அமைந்தனவா யிருந்தாலு மிருக்கலாம். இதுவும் முன்னொருகாலத்தில் உத்தராயணதியைக் குறிக்கின்றது. அதுவும் மஹாபாரத காலமான சுமார் கி. மு. 2000 வருஷகாலந்தான்.

(6) மாகபௌர்ணமியும் உத்தராயணதியும்.
(கி. மு. 2500)

இதற்கு முன் மகா பாரதகாலத்தில், மாக சுக்கிலாஷ்டமி திநத்தில் உத்தராயணதி ஸம்பவித்ததென்றும், அக்காலம் கி. மு. 2000 வருஷங்களுக்கு முற்பட்டதென்றும் சொல்லப்பட்டது. இப்பிரகரணத்தில், மஹாபாரத காலத்துக்கும் முற்பட்ட காலத்தைக் குறிக்கும் ஆதாரங்கள் நமது பூர்வ க்ரந்தங்களில் அகப்படுகின்றனவா என்பதைக் கவனிப்போம். இப்பிரகரணத்தில், மாக பூர்ணமி திநத்தில், உத்தராயணம் ஆரம்பித்த காலம் நமது க்ரந்தங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றதென்றும், அதாவது முன் ப்ரகரணத்தில் கூறிய திநத்துக்கு,சுமார் 7 திநங்களுக்குப் பின், உத்தராயணதி யென்றும் நிர்ணயிக்கப்படும்.

ஸத்ரயாகம்.—நமது முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவந்த பலவித யாகங்களில் ஸத்ரம் என்பதொன்று. வருஷாரம்பத்தில் துவங்கி வருஷமுழுமையும் நடக்கக்கூடிய, வருஷயாகம் (Annual Satra). ஸத்ரம் முக்யமாய் உத்தராயணதியில் ஆரம்பிக்கவேண்டிய முறையாதலால், அடிக்கடி உத்தராயணதி திநத்தைப் பற்றி அக்காலங்களில் விவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாம் முன் கூறியபடி உத்தராயணதியும் காலக் கிரமப்படி முந்திக்கொண்டு வந்திருப்பதால் காலத்துக்குத் தக்கபடி ஸத்ர ஆரம்ப காலத்தையும் முந்தியே ஏற்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். மேற் கூறிய

விவாதங்களில் ஒன்று தைத்திரீய ஸம்ஹிதை VII-iv-8-ல் விவரமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

இதில் ஸத்ராரம்பம் சைத்ரபூர்ணமியிலா பால்குந (பங்குனி) பூர்ணமியிலா, அல்லது மாக ஏகாஷ்டக திநத்திலா என்று விவாதம் ஏற்படும் பொழுது, தைத்திரீய ஸம்ஹிதா காலத்தவர்கள் தங்கள் காலத்தில் உத்தராயணதி மாக ஏகாஷ்டக (மாக கிருஷ்ணஷ்டமி) திநத்தினின்றும் 8 திநங்கள் முன்னடைந்து மாக பௌர்ணமியிருப்பதாகக் காணப்பட்டதால் ஸத்ராரம்பமும் மாக பௌர்ணமியை யடுத்துத்தா னிருக்கவேண்டும். ஏகாஷ்டகம் முதலான பூர்வ அநுஷ்டாந திநங்கள் சரியல்ல வென்றும் நிர்ணயித்திருக்கின்றனர். "ஸம்வத்ஸர ஆரம்பமான பௌர்ணமிக்கு நான்கு திநங்களுக்கு முன் தீக்ஷைசெய்துகொள்ளவேண்டும்."

ஏகாஷ்டக திநத்தில் தீக்ஷை செய்து கொள்ளுவதானல் அவர்கள் வருஷாரம்பத்திற்குப் பிறகு செய்து கொள்ளுகிறார்கள். ஆகையால் ஏகாஷ்டகதிநம் உதவாது என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள்.

ஊாயஶ்ரா ஃ வ–ஞண–் ஊாஸஶ்ரா ஃ
வ த–ஈா ஹ ஃ வ–ஈா ஹாஸ
ஸ௦வ தூஈாயதீக்ஷஜெ —ஸோமாகரர்.

இவ்விவாதத்தின் தன்மை லௌகிகர்களுக்கு ரஸிக்காவிடினும் இதினின்றும் சில காலநிர்ணயஹேதுவான (Of historical interest) ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதனல் நாம் அறியக் கூடியவையாவன:—

(1) தைத்திரீய ஸம்ஹிதை காலத்தில் மாக பௌர்ணமியில் உத்தராயணதியென்றும்,

(2) அதற்கு முற்காலத்தில் மாக ஏகாஷ்டக (மாக கிருஷ்ணஷ்டமி) திநத்தில் உத்தராயணதி யென்றும்,

(3) அதற்கும் முற்காலத்தில் பங்குனி பௌர்ணமியில் உத்தராயணதி இருந்ததென்றும் அறிகிறோம்.

(இன்னும் வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

புத்தகவரவு.

மெய்ஞ்ஞான போதம்:—ஸ்ரீமான் கொ. வடிவேலு செட்டியார் அவர்கள் லோகோபகாரி என்னும் வாரம் ஒருமுறை வெளிவரும் தமிழ்ப்பத்திரிகையின் ஆசிரியர். இவர்கள் 1911-ம் வருஷத்தில் அப்பத்திரிகையின் முதற் பக்கத்தில் வாரம் தோறும் வேதாந்த சாஸ்திரவிஷயமாக அருமையான வியாஸங்கள் எழுதிவந்தார்கள். அவைகள் அப்பத்திரிகையைப் படித்து வந்தவர்களால் மிகவும் நன்கு மதிக்கப்பெற்றுவந்தன. பின்பு அவர்களில் அநேகரின் வேண்டுகோளின்மேல் இப்போது அவைகள் ஒருங்கு சேர்க்கப் பட்டு புத்தக ரூபமாக வெளிவந்திருக்கின்றன. இப்புத்தகம் ஞான மார்க்கத்தில் நடைபெற விரும்புவோர்களுக்கு மிகவும் உபயோகமானது. இதன்கண் 52 வியாஸங்கள் உள்ளன. அநுபவசித்தமான அநேக ஞான விஷயங்கள், ஆன்றோர் மேற் கோள்களுடன் எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டுள்ளன. இதன் உயர் நலத்தை உத்தேசிக்க இதன் விலை அணு 12 மிகவும் குறைந்தது. வேண்டுவோர் சென்னை கோமளேசுவரன் பேட்டையில் சச்சிதாநந்த அச்சியந்திர சாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீபஞ்சதசப்பிரகாணம் மூலம்:—அத்வைத வேதாந்தத்தில் மிகவும் அருமையான நூல் இது. ஸ்ரீமத் வித்யாரண்ய சுவாமிகள் ஸம்ஸ்கிருதபாஷையில் எழுதியுள்ள பிரவித்தமானநூல் இது.இது தமிழில் வசனரூபமாக முன் மொழி பெயர்த்து பிரவித்தம் செய்யப் பெற்றுள்ளது. இப்போது சுலபமான செய்யுள் நடையில் முதல் பத்துப்பிரகரணம் கோவிலூர் மடம் ஸ்ரீ நித்தியாநந்த சுவாமிகளாலும் பின் ஐந்து பிரகரணம் ஸ்ரீ சுப்பைய சுவாமிகளாலும் மொழிபெயர்க்கப்பெற்று அம்மடத்தைச் சேர்ந்த காசிகானந்த சுவாமிகளால் பாக்கெட்டு அளவில் பிரவித்தம் செய்யப் பெற்றிருக்கிறது. இதன் எழுத்துக்களும் நன்றாய் பதிப்பிக்கப் பெற்றும், புத்தகக் கட்டிடமும் அழகாய் அமைந்தும் இருக்கின்றன. இதன் விலை அணு 10 தான். வேண்டுவோர் சென்னை கோமளேசுவரன் பேட்டை சச்சிதானந்த அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

பத்திரிகை வரவு.

ஞானபாநு:—இஃது ஒரு புதிய தமிழ்ப் பத்திரிகை. மாதம் ஒரு முறை மைலாப்பூரில் வெளிவருவது. எளிய தமிழில் யாவர்க்கும் பயன்படும்படி இதன்கண் ஞான முறைபற்றிய பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஈசகேந உபநிஷத்துக்களின் தமிழ் மொழி பெயர்ப்பு பிரசுரமாகி

வருகின்றன. இவைகள் முன்னரே சிலஅறிஞரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இதுவரை மொழிபெயர்க்கப் பெருத எத்தனையோ ஸம்ஸ்கிருத ஞான சாஸ்திரங்களும் உபநிஷத்துக்களும் இருக்கின்றன. பிறர் செய்திராத பணியைச் செய்தல் நலம். இதன் வருஷசந்தா ரூ 1—12—0 வேண்டுவோர் "காரியஸ்தர் ஞாநபாநு, மைலாப்பூர், சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை கவர்ண்மெண்ட் விவசாய இலாகா அதிகாரிகளால் 1913-14-ம் வருஷத்திற்கு பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு பிரசுரமாகி வெளிவந்திருக்கிறது. அதில், ஸாதாரணமாக மற்றெல்லாப் பஞ்சாங்கங்களிலும் உள்ள திதிவாரம் நக்ஷத்ரம்முதலிய விஷயங்களுடன் விவஸாயசம்பந்தமான வெகு உபயோகமுள்ள விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ஆங்கில பாஷையிலும் ஸ்வதேச பாஷைகளிலும் இப்பஞ்சாங்கம் அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை அணு 1 தான். இதை வேண்டுவோர் Superintendent Government Press, Madras என்ற விலாஸதாருக்கு எழுதி தூதைப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

சமாசாரம்.

Theosophical Educational Trust.—தியஸாபிக்கல் எடுகேஷனல் டிரஸ்டு:—ஷை நாமதேயமுடைய பிரஹ்மக்ஞாந முறையில் நம் தேசத்தில் கல்வி கற்பிக்க உத்தேசமுள்ள ஒரு ஸபை மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையாரால் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இது 1860ஞு த்திய 21 வது சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெறும். இச்சபையின் முக்ய நோக்கங்களாவன:—

சிறிய, பெரிய கல்வி கற்பிக்கும் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் ஸ்தாபித்தல், அவைகளில், அந்தந்த மாணவரின் சமயமுறையைக் கற்றுக் கொடுத்தல் முக்யமான அம்சமாம்.

இச்சபையின் முதல் ஏற்படுகிற நிர்வாகசபையின் அங்கத்தினர்கள் (1) மாதுஸ்ரீ பெஸண்டு அம்மை அக்கிராசநாதிபதியாவர் (2) ஸ்ரீமான் லேட்பீடர், (3) ஸ்வாட்ஸ—, (4) ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்(பென்ஷன் ஹைக்கோர்ட்டு ஜட்ஜு,) (5) திவான்பஹதூர் டி. சதாசிவஐயரவர்கள்(6) மைசூர் ஹைகோர்ட்டு ஜட்ஜு சந்திரசேகரஐயர் அவர்கள் (7) கான் பகதூர் கண்டல் வாலா (பூனு) (8) ஜி. சுப்பையா செட்டியார் அவர்கள் (9)

B. P. வாடியா (10) ஜி.எஸ். அரண்டேல் (11) இச்பால்நாராயணக்கர்டு (12) பி. கே. டிலாங்கு (13) மாதுஸ்ரீ F. E. அரணடேல் (14) மாதுஸ்ரீ கோபெல் (15) J. R. ஆரியா. மேற்படி ஸபையில் 14 பேர்களுக்குக் குறையாமலும் 28 பேர்களுக்கு அதிகமாகாமலும் அங்கத்தினர்கள் இருக்கவேண்டும். சபையின் அங்கத்தினர், பிரஹ்மக்ஞான சபையின் உள் வகுப்பு அங்கத்தினராக (Esoteric Section T. S.) இருக்கவேண்டும். சபையின் தலைவர் ஷை உள் வகுப்பின் தலைவராக இருத்தல் வேண்டும். சபையின் எல்லா சம்பத்தும் ரிக்கார்டுகளும், தலைவரின் வசம் இருக்கவேண்டும். சபையின் தலைமையான ஸ்தானம் சென்னை ஆதியாருகும்.

ஹார்டிஞ்ச் பிரபு அவர்களின் ஜநநதிநக் கொண்டாட்டம்:—நாளிதுமீ 20வ ராஜ பிரதிநிதி மஹாகநந்தங்கிய ஹார்டிஞ்ஜ் பிரபு அவர்களின் ஜநநதிநமாக இருக்கின்றமையால், இந்துதேச முழுவதும் அந்த திநத்தைத் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்பது ஏற்பட்டிருக்கிறது. அந்த திநத்தில் இந்தியாதேசத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளிலுமுள்ள குழந்தைகளுக்கு சிற்றுண்டிகளும் பழங்களும் கொடுத்து அவர்களைக் குதூஹலப்படுத்தலும், ஏழைகளுக்கு அந்நமிட்டு அவர்களைத திருப்திப்படுத்தலும் ஏற்படும். அந்த நாள் ஓய்வு நாளாகக் கொண்டாடப்படும். நந்தேசத்து ராஜ பிரதிநிதி ஹார்டிஞ்ச் பிரபு அவர்கள் உண்மையாக நம்தேசத்து க்ஷேமத்தைக் கருதியவர். தெய்வ ஸம்பத்து பெற்றவர். சென்ற டிஸம்பர்மீ டில்லிமாநகரத்தில் ராஜாங்க பிருதுக்களுடன் பிரவேசித்த காலத்தில் ஒரு தீயவன் வெடிக்குண்டைப் பிரயோகித்தான். ஈசுவராநுக்ரஹத்தால் ஷை பிரபு அவர்களும், அவருடைய பத்நியாரும் தப்பினர்கள். அது நம் தேசத்தின் நன்மையின் பொருட்டே. ஷை பிரபு அவர்களும் அவருடைய பத்நியாரும் நீடூழி வாழ்க.

மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மை சென்றமீ 30வ வாக்கில் இங்கிலாந்து போய்ச்சேர்ந்திருக்கிறார். அங்கிருந்து ஸ்வீடன் தேசத்துப்பிரதாநநகராகிய ஸடாக்ஹோம் நகரத்துக்குப்போவார். அந்நகரில் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரஹ்மக்ஞான கிளைச்சபைகளின் மஹாசபை கூடும். அதன் அக்ராஸநத்தை அம்மையார் வகிப்பார். பின்பு அங்கிருந்து ருஷியா தேசத்திலுள்ள பின்லண்டுக்குப் போவார்கள் பின்பு நம் தேசத்திற்கு ஜூலை 4 வ வாக்கில் திரும்புவார்களென நினைக்கிறோம். பிரஹ்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, நித்யாநந்த என்ற இருவர்களும் அம்மையாருடன் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு இஷ்டமுள்ளவர்களாக இல்லை எனத்தெரியவருகிறது.

சென்றமீ 24, 25உகளில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 12-வது ஆண்டு நிறைவு மஹோத்ஸவம், மகா-ா-ஸ்ரீ கநந்தங்கிய K. இராம ஐயங்காரவர்களுடைய அக்ராஸநத்தின் கீழ் நடைபெற்றது. அநேக வித்வான்கள் உபந்யாஸம் செய்தார்கள். சங்கத்திற்குத் தனிப்பட கட்டிடம் முக்கியமாக வேண்டுவது. அதற்கு ஸேதுபதி பள்ளிக்கூடத்திற்கருகே முன்னரே ஒரு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. அந்த இடம் சங்கத்திற்கு வேண்டிய கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதுமானது. கட்டிடங்கள் கட்டுவதற்கு தமிழபிமாநிகள் திரவிய ஸஹாயஞ் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.,

---

சென்றமீ 24, 25உகளில் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பிரஹ்மக்ஞாந கிளைச்சபைகளின்பெரியகூட்டம் நீடாமங்கலத்திற்குச்சமீபத்திலுள்ள ஹரித்துவாரமங்கலத்தில் கூடியது. மாதுஸ்ரீ ஆடேர் அம்மாள் அக்ராஸநம் வகித்தனர். பல ஊர்களிலிருந்து பிரஹ்மக்ஞாந ஸபையின் அங்கத்தினர்கள் சுமார் 100 பேர்கள் கூடினார்கள். வேத கோஷத்துடன் ஸபை ஆரம்பிக்கப்பட்டது. ஸந்மார்க்க முறையில் இரண்டு முக்ய அம்சங்களை பற்றி மாதுஸ்ரீ ஆடேர் அம்மாளாலும்,புருஷார்த்தம்என்பதைப்பற்றிமகா-ா-ா-ஸ்ரீ T. S. லக்ஷ்மீநாராயண ஐயரவர்களாலும் மந ஐகாக்ரியத்தைப்பற்றிஸ்ரீமான் இராமச்சந்திரநாயுடு அவர்களாலும், மஹமத்நபியைப் பற்றிமகா-ா-ா-ஸ்ரீ கும்பகோணம் S.இராஜாராம ஐயரவர்களாலும், ஒப்புரவைப்பற்றி மகா-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களாலும். மஹாத்மாக்களைப்பற்றி மகா-ா-ா-ஸ்ரீ A. நீலகண்ட சாஸ்திரிகளவர்களாலும், பிரஹ்மக்ஞாந சபையின் அங்கத்தினர்களின் உத்தரவாதத்தைப் பற்றி முன்ஸீப் மகா-ா-ா-ஸ்ரீ C.V.கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களாலும் உபந்யாஸங்கள்நிகழ்ந்தன.சென்னை ஹைக்கோர்ட்டில் நடந்த வியாஜ்யத்தில் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் எடுத்துக்கொண்ட நன்முயற்சிக்கு, செய்ந்நன்றியறிவுடன் வந்தநோபசாரமான தீர்மானம் செய்யப்பட்டது. ஸ்ரீமாந் லேட்பீடரவர்கள் ஸபைக்குச் செய்திருக்கிற உயர்ந்த கைங்கர்யங்களுக்கு நன்றி பாராட்டியதுடன் அவர் பால் பிரஹ்மக்ஞாந ஸபையைச் சேர்ந்தவர்களுக்கு என்றும் மாறாதவும் உறுதியுமான அன்பு இருக்கிறதென்று ஒரு தீர்மானம்செய்யப்பட்டது. வந்த விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் என்ற தர்மத்தை ஸ்ரீமான் V. கோபாலஸ்வாமி ரகுநாதராஜாளி யாரவர்கள் மிகுந்த சிரத்தையுடன் வெகு சிறப்பாய் நடத்தினார்கள். மஹாத்மாக்களின் அநுக்ரஹத்தால் எல்லாம் நேர்மையாயும் நன்றாயும் நடைபெற்றன. அடுத்த கான்பரன்ஸ் ஸெப்டம்பர்மீ 20, 21உ களில் தஞ்சாவூர் ஜில்லா திருமிச்சியூரில் கூடும். ஸ்ரீமான் வனங்குடி இராமச்சந்திரநாயக்கரவர்கள் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்

ளூர். மதுரை பிரஹ்மக்ஞாந ஸபையினின்று வெளிவரும் துண்டுப்பத்திரிகைகளின் ஆதரவுக்காக ஷை கான்பரன்ஸின் அங்கத்தினரால் ரூ. 10 நன்கொடை அனுப்பப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் கிளைச்சபைகளின் பெரிய கூட்டத்தாரால் (Conference) இப்போது முதல் தடவையாகத் துண்டுப்பத்திரிகைகளின் பிரசுரத்தின் பிரயோஜநார்த்தமாக நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது. இனி இக்கொடையானது வரவரப் பெருகுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீமாந் லெட்பீடர்;—இப்போது இவர்கள் கொடைக்கானலில் வஸிக்கிறார்கள். பிரஹ்மக்ஞாந சபையைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் தேக சௌக்கியத்தை உத்தேசித்தும் அவருடன் ஸத்கால க்ஷேபஞ் செய்யவும் அங்கே போயிருக்கிறார்கள். ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் ஊர்த்வ ரேதஸ் உடையவர்; தீரர். த்வந்த்வங்களை ஜயித்தவர்; எப்போதும் ஸந்துஷ்டியுள்ளவர்; அவர் முகமலர்ச்சியே அவர் மநத்தின் சாந்தத்தையும் மாஸ் ஸமாதாநத்தையும் பளிங்குபோல் விளக்குகின்றது. அஹம் பாவத்தின் பேரிலும், க்ரோத புத்தியின் பேரிலும், கண் தலை தெரியாமல் தலை கீழாக நடக்கும் சில ஆங்கிலப் பத்திரிகைகளின் அக்ரமமானவும் பொய்யானவுமான பிதற்றுதலைச்சில தமிழ்ப்பத்திரிகைகளும் வேதவாக்கென நம்பி தாமும் தலைவிரிகோலமாய் இப்பெரியாரைப்பற்றி தூஷிக்க ஆரம்பித்திருக்கின்றன. அந்தோ! என்ன பாவம்! இது காலத்தின் கோலமோ கொடுமையோ நாம் அறிகிலம். எங்கும் நலத்தை நாடி அதை மதித்தலே ஸாஹிருதம் தரும். அவ்விதமின்றி மலத்தை நாடினல் 'சொகுசுக்காரனுக்கு மூன்று இடத்திலே' என்ற பழமொழிக்கிணங்க அவர் கதியாகும். பிறர் நிந்தை எப்போதும் தீயது. பெரியோர் நிந்தை அதினும் தீயது ஆசாரக்கள்ளன் கடை முறையில் துன்பமுறுவான். இப்பெரியாரை நிந்திப்பவர் முதலில் அவரால் எழுதப் பெற்று வெளிவந்திருக்கிற கிரந்தங்களை வாசித்தல் வேண்டும். அல்லது அவருடைய ஸம்பாஷணையை அரை நிமிஷமாவது கேட்க வேண்டும். "தன்னுயிர் ஓம்பான், பிறவுயிரோம்பும் மன்னனுகிய" பகவான் கௌதமபுத்தரின் உண்மையான ஞாந ஸத்புத்ரர் இவர். பிறர் நிந்தையால் இவர் மநங் கலங்காது, கலங்கிடில் நிந்திக்கிறவர் கதி அதோகதிதான். ஒரு தமிழ்ப் பத்திராதிபர் இப்பெரியாருக்கு ஒரு காராகிருஹம் தேடுகின்றனராம். தமக்கு வரும் கதியைத் தாம் முன்னரே அறிந்துகொண்டார் போலும். ஸ்ரீமான் லெட்பீடரென்பார் அவருக்கு ஒரு கண்ணாடியாக உபயோகப்படுகின்றார் போலும்.

பத்திராதிபர்.